

Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 21 இதழ் - 7 ஜீலை - 2008


**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

✆ 04257 - 230030, Cell : 98427 - 30382, 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. நல்லொழுக்க ஜீவியம் மட்டும் இரட்சிக்கப்படுவதற்கு ஏன் போதுமானதல்ல? ........ 9
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 20
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 22
7. அதைப்பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன் ........ 26
8. இரத்த சாட்சிகள் ........ 29

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 21 JULY - 2008 Issue - 7


ஆசிரியர் உரை

## "நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?"

இப்பூவுலகைப் பாவத்தின் கோரப் பிடியிலிருந்து மீட்டெடுக்கும்படியாய் வந்த இயேசு ஆண்டவரை நாம் ஒவ்வொருவரும் போற்றித் துதிப்பதற்கு ஏராளமான காரணங்கள் உண்டு. ஆம், மானிடத்தின் மீது அவர் கொண்டிருந்த அன்பைச் சொல்லுவதா, பாவிகளுக்காக அவர் செய்த தியாகத்தை மெச்சுவதா, தன்னலமற்ற அவர் வாழ்வுக்குத் தலை வணங்குவதா, தேவச் சித்தத்தை நிறைவேற்றுவதில் அவர் கொண்டிருந்த வைராக்கியத்திற்கு வடிவம் கொடுப்பதா, இயற்கையின் மீது அவர் செலுத்தின அதிகாரத்திற்கு இலக்கணம் வகுப்பதா என்று எதைச் சொல்லுவது, எதை விடுவது என்று தெரியாமல் ஒருவன் திணறியாக வேண்டும். இப்படி, இயேசு ஆண்டவரைப் போற்றுவதற்கான காரணங்களில் ஒன்றாக, அவருடைய எளிய நடைப் **பேச்சையும், செயல்பாட்டையும்** நாம் சேர்த்துக் கொள்ளலாம். ஏனெனில், "செய்யவும், உபதேசிக்கவும்" தொடங்கின (அப். 1:2) இயேசுவானவர் தாம் அப்படி செய்து உபதேசித்த எல்லாவற்றையும் அனைத்து தரப்பு மக்களும் சுலபமாய் புரிந்து கொள்ள வேண்டுமென்பதில் அதிக அக்கறை காட்டினார். அதற்காக அவர், ஆகாயத்துப் பறவைகள், அடைக்கலான் குருவிகள், காட்டுப்புஷ்பங்கள் என்று இயற்கை சார்ந்தவைகளையும், எல்லோரும் அன்றாடம் பயன்படுத்தும் உப்பையும், அனைவரும் அறிந்திருக்கும் ஒளியையும் உதாரணங்களாகப் பயன்படுத்தினார்.

இயேசுவானவரின் உபதேசம் "கடினமானது, யார் இதைக் கேட்பார்கள்" (யோவா 6:60) என்று சொல்லி "அவருடனே கூட நடவாமல் பின் வாங்கிப் போனவர்கள்" (யோவா 6:66) கூட, அவருடைய உபதேசம் புரிந்து கொள்வதற்குக் **கடினம்** என்று கூறாமல், ஏற்றுச் செயல்படுத்துவதற்குக் கடினம் என்றே கூறியுள்ளனர்.

இப்படித் தன் **உபதேசத்தையே** சீடர்கள் புரிந்து கொள்ள வேண்டு மென்பதில் அக்கறை செலுத்தின இயேசுவானவர், தான் செய்த **செயல்கள்** எதையும் தன்னுடைய சீடர்கள் புரியாமலிருக்கும்படி செய்திருக்கமாட்டார். ஆனால், யோவான் 13ம் அதிகாரத்தில், ஒருவருக்கொருவர் மனமேட்டிமை யோடிருந்த சீடர்களுக்கு முன்பாகத் **தாழ்மையை** அவர்கள் கற்று கொள்ள வேண்டுமென்பதற்காகச் செய்த காரியத்தை, இன்றைக்கும் எப்படிப் புரிந்து கொள்ளாமல், அவரைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிற ஒரு கூட்டத்தார், “கர்த்தருடைய பந்தியின்” போது, ஒருவருக்கொருவர் கால் களை கழுவிக் கொள்ள வேண்டும் என்று தவறாகப் பின்பற்றுகிறார்களோ அதுபோல, அன்றைக்கும் சீடர்களுக்குத் தடுமாற்றம் இருந்தது. இயேசு ஆண்டவருக்கும், பேதுரு அப்போஸ்தலனுக்கும் நடந்த உரையாடலே அதற்கு சான்றாக உள்ளது. (யோவா 13:6-9) தன் செயலின் நோக்கத்தை வழக்கமாக ஓரளவுக்காகிலும் புரிந்து கொள்ளும் தன்மை கொண்ட பேதுருவே அங்கே ஆட்டம் காணுவதைக் கண்ட கர்த்தர், மற்ற சீடர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை என்பதைத் தெரிந்து கொண்டு, தன் செயலின் முடிவில் “நான் உனக்கு செய்ததை அறிந்திருக்கிறாயா?” என்று பேதுருவை பார்த்து மாத்திரம் கேட்காமல், **நான் உங்களுக்கு செய்ததை அறிந்திருக் கிறீர்களா?** என்று ஒட்டு மொத்த சீடர்களைப் பார்த்துக் கேட்டுள்ளார்.

“நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?” என்று இயேசு கேட்டதிலிருந்து, அவர் அங்கே செய்த செயல், அவர்களுக்குச் சில பாடங் களைக் கற்றுத்தர ஏதுவாக இருந்திருக்கிறதென்று நன்றாகவே தெரிகிறது. ஆகையால், அச்செயல், இன்றைக்கும் கிறிஸ்துவின் சீடர்களாக வாழ விரும்பும் நமக்கு சில பாடங்களைக் கற்றுத்தர வல்லதாயிருக்கிறதென் பதில் சந்தேகமில்லை. அந்தப் பாடங்களை நாம் சிறப்பாகக் கற்று கொள் வதற்கு உதவியாயிருக்கும்படி நாம் இப்பொழுது **கால்களைக் கழுவுதல்** சம்பவம் இடம் பெற்றிருக்கும் யோவான் 13 ஆம் அதிகாரத்தின் பின்னணி குறித்து, நமது வழக்கத்தின்படியாகப் பார்த்து விடுவோம்.

அது ஒரு வியாழக்கிழமை இரவு நேரம். எருசலேம் பட்டணத்தில் உள்ள ஒரு மேல் வீடு. கர்த்தரின் வார்த்தையின்படியாகப் பஸ்கா விருந்து ஆயத்தம் செய்யப்பட்டது. அடுத்த 24 மணி நேரத்தில், இயேசுவானவர் சரீரத்தில் இப்பூமியில் இருக்கப் போவதில்லை. இந்த இரா விருந்தில் தன்னைக் காட்டிக் கொடுக்கப் போகும் யூதாசையும் சேர்த்துக் கொண்டு அன்பு காட்டியுள்ளார் (யோவா 13:1). இயேசுவை காட்டிக் கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டின பின்பு, இயேசுவும், சீடர்களும் போஜனம் பண்ணிக் கொண்டிருக்கையில், யாரும் எதிர்பாராத விதமாக இயேசு போஜனத்தை விட்டு எழுந்து விட்டார் (யோவா 13:3,4) அப்படி எழுந்த இயேசு, முதல் காரியமாகத் தான் உடுத்தியிருந்த வஸ்திரத்தைக் **கழற்றினார்**. அடுத்து, ஒரு சீலையை எடுத்து அரையிலே **கட்டிக் கொண்டார்.** பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக் கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். (யோவா 13:4,5) எப்படியிருந்திருக்கும் சீடர்களுக்கு? “கப்சிப்” என்று ஆளாளுக்கு ஒருவரை ஒருவர் மிரண்டு போய் பார்த்துக் கொண்டிருந்திருப்பார்கள். அப்படித்தானே.

இங்கே ஒன்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். "கால்களை கழுவுதல்" அன்றைக்குப் பொதுவாக வழக்கத்தில் இருந்த ஒன்று தான். விருந்தாளிகள் தங்கள் வீட்டிற்கு வரும் போது, வீட்டுக்காரர் வீட்டின் கதவருகே ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்திருப்பார். விருந்தாளி வரும் போது, வீட்டைச் சேர்ந்த ஒருவர் வந்து, நடை பயணத்தால் அழுக்கடைந்த விருந்தாளியின் கால்களைக் கழுவி உள்ளே அனுப்புவார். ஆனால், கால் களைக் கழுவுதல் ஒரு கேவலமான வேலையாதலால் பெரும்பாலும் அடிமை களே இவ்வேலையைச் செய்ய பணிக்கப்படுவர். ஓர் எபிரேய அடிமையை இவ்வேலையைச் செய்யும்படி மோசேயின் பிரமாணப்படி கட்டாயப்படுத்த முடியாது (லேவி 25:39,43) ஆகவே, புறஜாதி அடிமைகளே இவ்வேலை யைச் செய்வர். ஆனால், சில நேரங்களில் அடிமைகள் இல்லாத போது, வீட்டுக்காரரே இவ்வேலையைச் செய்ய வேண்டியிருக்கும்.

பஸ்கா விருந்துக்காக, இயேசுவின் சீடர்கள் பெத்தானியாவி லிருந்து, ஒலிவமலை வழியாக எருசலேம் பட்டணத்துக்கு நடந்து வந்திருந்தார்கள். அந்நாட்களில் அது ஒரு மண் பாதை. இன்றைக்கு இருப்பது போல பாதங்களை மறைக்கும் பாதரட்சைகள் கிடையாது. புழுதி படிந்த கால்களோடு தான் சீடர்கள் அங்கே வந்திருப்பர். பஸ்கா விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வீட்டுக்காரர், சீடர்கள் வந்த போது அங்கே இருந்ததாகவும் தெரியவில்லை. மண் பாதை வழியாக நடந்து வந்த சீடர்கள். புழுதி படிந்த கால்களோடே உள்ளே பிரவேசித்து பந்திக்காக அமர்ந்து கொண்டார்கள். வீட்டுக்காரர் இல்லாவிட்டால் என்ன, இவர்களாகிலும் ஒருவருக்கொருவர் அந்த வேலையைச் செய்திருக்கலாம். ஆனால், செய்யவில்லை. **தங்களில் எவன் பெரியவன் என்று தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்த** (லூக் 22:24) இவர்களுக்கு, ஒருவருக்கொருவர் தாழ்ந்து போக வேண்டுமென்கிற மனம் எங்கிருந்து வரும்? மொத்தத்தில், அந்தப் பந்தியில், சீடர்கள், அழுக்குப் படிந்த கால்களோடு மாத்திரமல்ல, பெருமை என்ற அழுக்கு நிறைந்த இருதயத்தோடும் அமர்ந்திருந்தார்கள்.

மனிதருடைய உள்ளத்தில் இருப்பதை அறியும் (யோவா 2:25) இயேசு, அங்கே அவர்களுக்கு "**தாழ்மை**" குறித்து போதிக்கத் தொடங்காமல், தாழ்மையை செயலில் காட்டும் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கினார். ஆம், ஒவ்வொருவருடைய பாதங்களாக வரிசையாகக் கழுவித் துடைத்தார். அடுத்தது பேதுரு. அப்பொழுது, துடுக்கான செயல்பாட்டிற்கும், துடிப்பான பேச்சுக்கும் சொந்தகாரராகிய பேதுரு "**ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா**" என்றார் (வ.6) "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக; நான் செய்கிறது இன்னதென்று **இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்று**" (வ.7) லேசாகக் குத்தி பதில் தந்தார். இப்பதிலில் மனம் மேவாத பேதுரு "**நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவக்கூடாது**" என்று உறுதிபடக் கூறினார். முன்னே கொஞ்சம் லேசாக இடித்துரைத்த இயேசு இங்கே சற்று கடுமை காட்டி " **நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை**". என்று உரத்து கூறினார் (வ.8) இதைக் கேட்ட பேதுரு, தனக்கு இயேசு செய்யும் காரியம் புரிந்ததா என்பது பற்றிக் கிஞ்சித்தும் கவலைப் படாமல் "ஐயோ, என் இயேசுவினிடத்தில் எனக்குப் பங்கில்லாமல் போகக் கூடாது என்று பதறி அப்படியே சரணாகதி அடைந்து, "என் கால்களை மாத்திர மல்ல என் கைகளையும் என் தலையையும் கூடக் கழுவ வேண்டும்" என்று மன்றாடினான்.

சரி, இப்படி, ஒவ்வொருவருடைய கால்களையும் கழுவின பின்பு, **"தன் வஸ்திரங்களைத் தரித்துக் கொண்டு, திரும்ப உட்கார்ந்து அவர்களை நோக்கி; "நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?"** (யோவா 13:12) என்று கேட்டார். அவர்கள் கண்கள் காணும்படி அவர் செய்த காரியத்தை அவர்கள் அறியாமலா இருந்திருப்பார்கள்? பின்னே, ஏன் அப்படி கேட்டார். அதாவது, தன் செயலின் ஆவிக்குரிய கருத்தையும், அது தரும் பாடங்களையும் அவர்கள் அறிந்து கொண்டார்களா என்பதே அக்கேள்வியின் நோக்கம். இயேசு ஆண்டவர் கேட்ட கேள்வியை நமது தலைப்பாக எடுத்து அலசிக் கொண்டிருக்கும் நாம், இயேசுவானவர் கால் களைக் கழுவின சம்பவம், நம் ஒவ்வொருவருக்கும் தரும் பாடங்கள் என்ன என்று இப்பொழுது பார்த்துப் பயனடைவோம்.

## I. தடைகளைக் களைந்து போடவேண்டும்

இயேசு ஆண்டவர் சீடர்களின் கால்களைக் கழுவின சம்பவத்திலிருந்து நாம் கற்கும் முதல் பாடம், தேவனுக்காகச் சேவை செய்ய விரும்பும் ஒருவன் தடைகளைக் களைந்து போட வேண்டுமென்பது.

தன் சீடர்களோடு பந்தியிருந்த இயேசு, போஜனத்தை விட்டெழுந்து செய்த முதல் காரியம் **தன் வஸ்திரத்தைக் கழற்றியது.** வஸ்திரம் என்பது அந்நாட்களில் அணியும் ஓர் நீண்ட அங்கி. அதை அணிந்து கொண்டு நடப்பதும், உட்காருவதும் சிரமமான ஒன்று அல்ல. ஆனால், நன்றாகக் குனிந்து, எழுந்து வேலை செய்வது சிரமமானது. செய்யும் வேலையில் கவனம் செலுத்துவதை விட, அந்த வஸ்திரத்தை ஒழுங்கு படுத்துவதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டியதாயிருக்கும். ஆகவே, சீடர்களின் பாதம் தொடும் அளவுக்குக் குனிந்து வேலை செய்ய விரும்பிய இயேசு, அவ்வேலைக்குத் தடையாக இருந்த வஸ்திரத்தை முதலாவது கழற்றினார்.

தேவனுக்காக ஒன்றைச் செய்வதற்கு, அதற்குத் தடையாக இருப்பதைக் களைந்து போட வேண்டுமென்பது இயேசு ஆண்டவருக்குப் புதிதான ஒன்று அல்ல. எப்படியெனில், தேவனுடைய அநாதித் தீர்மானத் தின்படி, மனித சாயலை ஏற்றுக்கொள்வதற்காக, தேவனுடைய ரூபமா யிருந்து **தேவனுக்கு சமமாயிருந்த மகிமையைக் களைந்துள்ளார்.** (பிலி 2:6) இயேசு ஆண்டவர் முதல் முறையாகப் பூமிக்கு வந்ததே **களைந் ததின்** மூலம் தான். ஆகவே தான், பூமியில் தான் நிறைவேற்ற வேண்டியதை செய்து முடித்து, பிதாவினிடம் போகும் வேளை வந்த போது "பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு **முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமை யினாலே** இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" என்று மன்றாடினார் (யோவா 17:5).

மாற்கு நற்செய்தி நூலில், "பர்திமேயு" என்ற பார்வையற்ற மனிதன் **இயேசு உன்னை அழைக்கிறார்** என்ற செய்தியைக் கேட்டவுடன் (மாற் 10:49) அவரிடம் விரைந்து செல்வதற்குத் தடையாக இருந்த தன் மேல் வஸ்திரத்தை எறிந்து போட்டான் (வ. 50). இதன் மூலம், இயேசுவின் அழைப்பை ஏற்று, அவரிடம் செல்வதற்கு தடையாக இருக்கும் எதையும் இழக்கத் தான் தயார் என்பதை இயேசுவைப் போல செயலில் காட்டினான்.

இயேசு ஆண்டவரின் தியாகச் செயலையும், பர்திமேயுவின் பக்தி செயல்பாட்டையும் படிக்கும் நாம், நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் களைய வேண்டியவைகளைக் களைந்து போட ஆயத்தமாக இருக்கிறோமா? தேவனுக்காகவும், இயேசுவுக்காகவும், தேவனால் திட்டமிடப்பட்டு, இயேசுவால் கட்டப்பட்ட ஒரு சபைக்காகவும் எதிர் நிற்கும் தடைகள் எல்லாவற்றையும் தகர்த்துப் போட நாம் தயாராக இருக்கிறோமா? சொல்லுங்கள். உண்மையில், நம் ஒவ்வொருவருக்கும் விதவிதமான காரியங்கள் களைந்து போடப்பட வேண்டியவைகளாயிருக்கிறது. "நல்ல போதகரே" என்று இயேசுவினிடம் ஓடி வந்து, முழுங்கால் படியிட்டு, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டுமென்ற கேட்ட வாலிபனுக்கு, அவனது பணம் தடையாக இருந்தது போல், சிலராகிய நமக்கு, **பணம்** அல்லது **அந்தஸ்து** ஒரு தடையாக இருக்கிறது. (மாற் 10:22,23) வேறு பலருக்கு **உலக ஆசை** ஒரு தடையாக இருக்கிறது. (1யோவா 2:15) இன்னும் பலருக்குத் தங்களுடைய **பழம் பெருமைகளும், பாரம்பரியங்களும்** தடையாக இருக்கிறது. (மத். 15:9) இன்னும் கூட வேறு அநேகருக்கு **தேவனால் வருகிற மகிமையிலும், மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்புவது** (யோவா 12:43) ஒரு தடையாக இருக்கிறது. இவைகள் தவிர வேறு பல தடைகளும் இருக்கலாம்.

ஆனால், தேவ சேவைக்குத் தன்னை ஒப்புக் கொடுக்க விரும்பும் ஒருவன், இயேசுவின் செயல்பாட்டை எண்ணிப் பார்த்து, சீடர்களின் கால்களை கழுவின போது அவர் பின்பற்றின மாதிரியை அட்சரம் பிசகாமல் அப்படியே ஏற்றுச் செயல்படுவது அவசியம். இயேசு ஆண்டவரின் இம்மாதிரியைப் பின்பற்றாத யாரும் பரலோகம் செல்லவே முடியாது.

## II. பிரயோஜனமானவைகளைத் தரித்துக் கொள்ள வேண்டும்

இயேசு ஆண்டவர் சீடர்களின் கால்களைக் கழுவின சம்பவம் நமக்குக் கற்றுக் கொடுக்கும் இரண்டாவது பாடம், தேவ சேவைக்காய் பிரயோஜனமானவைகளை ஒருவன் தரித்துக் கொள்ள வேண்டுமென்பது.

போஜன பந்தியை விட்டெழுந்த இயேசு ஆண்டவர், தடையாக இருந்தவற்றைக் களைந்ததோடு நிற்காமல், தேவனுக்காகச் செய்யும் செயலுக்கு எது பிரயோஜனமாக இருக்கும் என்று கண்டு **அதைத் தரித்துக் கொண்டார்.** தமிழ் வேதாகமத்தில், ஒரு "சீலை" என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருப்பதற்கு மூல மொழியிலும், ஆங்கிலத்திலும் ஒரு "துண்டுத் துணி" என்று பொருள் கொடுக்கப்படுகிறது. ஒரு வேளை, அவர் அணிந்திருந்த அங்கியை, அவர் எடுத்துக் கொண்ட துண்டோடு ஒப்பிடும் போது, அளவில் மிகப் பெரிதாக இருந்தாலும், இயேசு **பெரிதான அங்கியை எடுக்காமல் துண்டு துணியையே எடுத்துக்கொண்டார்** என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவரோடிருந்த சீடர்களுக்கு, அங்கியை களைந்து, துண்டை எடுத்துக் கொண்ட இயேசுவின் செயல்பாடு எப்படியிருந்திருக்கும்? ஒரு மாதிரியாக அல்லவா பார்த்திருப்பார்கள்! பெரியதை விட்டுவிட்டு, இவர் ஏன் சிறியதை எடுத்துக்கொள்கிறார் என்றல்லவா சிந்தித்திருப்

பார்கள். சிரித்தும் கூட இருப்பார்களோ? ஆனால், இங்கே இயேசுவானவர் எது பெரியது, எது சிறியது என்று பார்க்காமல், தேவ சேவைக்கு **எது தேவையானது, எது பயனுள்ளது** என்றே பார்த்துள்ளார். அப்படியானால், பக்தி காரியங்களிலும், பரத்துக்கடுத்த காரியங்களிலும் நம்முடைய சிந்தனை யோட்டமும், செயல்பாடும் எப்படியுள்ளது?

பிரயோஜனமானதைத் தான் நாம் தரித்துக் கொள்ள வேண்டு மென்பதற்குப் **பழைய ஏற்பாட்டு உதாரணம்** ஒன்றைக் கவனியுங்கள். இஸ்ரவேலுக்கு விரோதமாய் 40 நாளளவும் தினம் தினம் கொக்கரித்துக் கொண்டிருந்த பெலிஸ்தன் கோலியாத்தை அடக்க வழி தெரியாமல் ராஜா உட்பட அனைவரும் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், ஜீவனுள்ள தேவனையும், அவர் சேனையையும் நிந்திப்பது கண்டு பொறுக்க முடியாத சிறுவன் தாவீது கோலியாத்தை எதிர்த்துப் போக துணிந்த போது, **சவுல் ராஜாவின், போராயுதங்கள் அவனுக்கு தரிப்பிக்கப்பட்டது.** அவைகளைத் தரித்து கொண்டு நடந்து பார்த்த தாவீது, அது ராஜாவினுடைய அங்கியாகவும் போராயுதங்களாகவும் இருந்தாலும், இவைகளில் தனக்கு "அப்பியாசம்" இல்லை என்று சொல்லிக் **களைந்து**, மேய்ப்பனுக்குரிய தடியையும், ஐந்து கூழாங்கற்களையும், ஒரு கவணையும் தெரிந்து கொண்டு, அவைகளைக் கொண்டு அந்த இராட்சசனை வீழ்த்தினான் (1சாமு 17ம் அதி) ஒருவேளை, அவன் போராயுதங்களும், ராணுவ உடையும் நன்றாக இருக்கிறதென்று அவைகளோடு போயிருந்தால் வெற்றி கிடைத்திருக்குமா? நிச்சயமாகக் கிடைத்திருக்காது. வெற்றியின் இரகசியம் புரிகிறதா?.

அருமையானவர்களே, நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் **நாம் எதை விடுகிறோம் அல்லது எவ்வளவு பெரியதை விடுகிறோம் என்பது ஒரு காரியமேயல்ல. மாறாக, எதைத் தரித்துக் கொள்ளுகிறோம் என்பதே முக்கியம்.** ஆனால், இன்றைக்கு மத உலகில், கிறிஸ்தவ சமுதாயத்தில் என்ன நடக்கிறது? அது எப்படி, நான் பெரிய வஸ்திரத்தை கழற்றி விட்டு சிறிய துண்டை தரித்துக் கொள்வது என்று பலர் தடுமாறுகிறார்கள், தயங்குகிறார்கள், மறுக்கிறார்கள். வானுயர நிற்கும் வஸ்திரமாகிய எங்களுடைய சபைக் கட்டிடத்தை விட்டு விட்டு, ஒரு சிறிய துண்டாகிய வாடகைக் கட்டிடத்திற்கு அழைக்கிறீர்களே அது எப்படி என்கிறார்கள். எங்களுடைய சபையிலே, பெரிய வஸ்திரம் போல நூற்றுக்கணக்கானவர்கள் வருகிறார்கள். ஆனால், உங்களுடைய சபையில் சிறிய துண்டு போல சொற்ப எண்ணிக்கைத்தானே என்கிறார்கள். எங்க ளுடைய சபையில், பெரிய வஸ்திரம் போன்று நிறைய படிப்பாளிகளெல்லாம் இருக்கிறார்கள். ஆனால், உங்களுடைய சபையில் ஒரு சிறிய துண்டு போல சாமானியர்கள் தானே வருகிறார்கள் என்கிறார்கள். எங்களுடைய சபையில் ஆராதனை பெரிய வஸ்திரம் போல, ஆட்டம் பாட்டத்தோடு அமர்க்களமாக நடக்கிறது. உங்களுடைய சபையில், ஆவி யோடும், உண்மையோடும் ஆராதிக்க வேண்டுமென்று (யோவா 4:24) சொல்லி மிக அடக்கத்தோடு ஒரு துண்டு போலல்லவா ஆராதிக்கிறீர்கள் என்கிறார்கள். எங்களுடைய சபையில் பெரிய வஸ்திரம் போல, பண்டிகைகள் எல்லாம் ஆர்ப்பாட்டமாக நடக்கும். உங்களுடைய சபையில் ஒரு துண்டு போல, எல்லாம் வசனப்படி தானே என்கிறார்கள். இவர்களையெல்லாம் என்ன சொல்லுவது?. இயேசுவைக்காட்டிலும் ஞானிகளா?.

புதிய பிரமாணத்தில் ஒழிக்கப்பட்ட இசைக்கருவிகளையும், நடனம் போன்றவைகளையும் நடைமுறை படுத்த "தாவீது போல" என்று சொல்லி திரையுலகம் தோற்றுப்போகுமளவுக்கு தொலைக்காட்சிகளில் வேடிக்கை காட்டுகிறார்கள். ஆனால், அதே தாவீது கோலியாத்தை எதிர் கொண்ட வேளையில் செயல்பட்டது போல, தேவன் மீது நம்பிக்கை வைத்து செயல்பட மறுக்கிறார்கள். இது எப்படி நியாயமாகும்? இயேசுவைப் போல வாழ்கிறோம் என்றும், வாழவேண்டுமென்றும் கூப்பாடு போடுகிறார்கள். ஆனால், இயேசு ஆண்டவரின் மாதிரியையும், போதனைகளையும் ஏற்று நடக்கமாட்டோம் என்று பிடிவாதமாக மறுக்கிறார்கள். நியாயத்தீர்ப்பில் இவர்களெல்லாம் எப்படி பதில் கொடுக்கப் போகிறார்கள்?

இதை வாசிக்கும் நாமாகிலும் இத்தீங்குணத்தை அறவே ஒழித்து விட்டு, கிறிஸ்துவின் மாதிரியை மனம் ஒப்ப ஏற்று, கிறிஸ்துவின் உபதேசத்துக்கு மாத்திரம் நம்மை ஒப்புக்கொடுப்போம்.

## III. புரியாவிட்டாலும் ஏற்றுக் கீழ்ப்படிய வேண்டும்

இயேசு ஆண்டவர் சீடர்களின் கால்களைக் கழுவின சம்பவம் நமக்கு கற்றுத்தரும் இன்னுமொரு பாடம். தேவ காரியங்கள், சில நேரங்களில் ஒருவனுக்குப் புரியாவிட்டாலும் தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்பது.

ஏனைய சீடர்களின் கால்களைக் கழுவித் துடைத்து பேதுருவண்டை வந்த போது, அவன் "ஆண்டவரே நீர் என் கால்களைக் கழுவலாமா" என்று கேட்டதோடு "நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவக் கூடாது" என்றும் சொன்னான். (யோவா 13:7,8) முதலில் அவன் மறுத்த போது, **இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய்** என்றார் (13:7) இயேசு அங்கே சொன்னதை நன்றாகக் கவனியுங்கள். ".... நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய்" என்று. இப்பொழுது உனக்குப் புரியவில்லை என்பதற்காக நான் செய்வதை ஏற்க மறுக்காதே, இடங்கொடு, ஏற்றுக்கொள் என்றார். இயேசு சொன்னது போலவே, அவர் கற்றுக் கொடுக்க விரும்பிய "மனத்தாழ்மை" என்ற பாடத்தைப் பேதுரு அங்கே புரிந்து கொள்ளாவிட்டாலும், **பின்னாளில் புரிந்து கொண்டார்.** ஆகவே தான், தனது முதல் நிருபத்தில் "**நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து மனத் தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்**" (1பேது 5:5) என்று எழுதியுள்ளார். அப்பொழுது புரியவில்லை. ஆனால், பின்னாளில் புரிந்துள்ளது.

வேதாகமத்தின் காரியங்களைக் கவனித்தால், மனிதர்களாகிய நம் அறிவுக்குச் சில காரியங்கள் புரிந்து கொள்ள சிரமமாக இருக்கலாம். நோவாவின் காலத்தில், பேழைக்குள் பிரவேசிப்பவர்கள் தான் காப்பாற்றப் படுவார்கள் என்று பிரசங்கித்த நோவாவின் வார்த்தைகள் அக்காலத்து ஜனங்களுக்கு எப்படியிருந்திருக்கும்? சரியாகவா புரிந்திருப்பார்கள்! உன்னை பெரிய ஜாதியாக்குவேன் என்றழைத்த தேவன் ஒரு குழந்தையைக் கொடுக்க 24 ஆண்டுகளை எடுத்துக் கொண்ட போது ஆபிரகாமுக்கும், அவனோடிருந்தவர்களுக்கும் அது எப்படியிருந்திருக்கும்? புதிய ஏற்பாட்டின் காலத்தில் பிறவியிலேயே பார்வையற்றவனாய் இருந்து ஓர் அடி வைப்பதற்கே தடுமாறிக் கொண்டிருந்தவன் கண்ணில் சேற்றைப் பூசி, "நீ

போய் சீலோவாம் குளத்திலே கழுவு" என்று (யோவா 9:7) இயேசு சொன்ன போது அவனுக்கும், அவன் விழுந்து எழுந்து போனதைப் பார்த்தவர்களுக் கும் எப்படியிருந்திருக்கும்? சொல்லுங்கள். தேவனின் செயல்பாடு சரியாக வா தெரிந்திருக்கும்? இல்லையே. ஆனால், அதற்காகத் தேவ காரியம் தவறாகி விட்டதா? சிந்தியுங்கள். இல்லையில்லை, "சரிதான்" என்றால், இக்கருத்தை நம் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ள ஏன் மறுக்கிறோம்? பேதுரு விடம் இப்பொழுது "நீ அறியாய், இனிமேல் அறிவாய்" என்ற போதும் "கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை", என்று சொன்ன போதும், அவன் தன் நிலையைத் தலைகீழாக மாற்றிக்கொண்டு "ஐயோ, என் ஆண்டவரிடம் எனக்குப் பங்கிருக்காதா" என்று பதறி; **நீர் என்ன வேண்டு மானலும் செய்யும், என்னை உமக்கும், உம் வார்த்தைகளுக்கும் ஒப்புக் கொடுக்கிறேன் என்றானே.** அந்த மனநிலையை நாம் எப்பொழுது தான் பெற்றுக் கொள்ளப்போகிறோம்? நம்முடைய அறிவுக்கும், அந்தஸ் துக்கும், அனுபவத்திற்கும், அபிப்பிராயத்திற்கும் வேலை கொடுத்து, இப்படியே இப்பூமியின் வாழ்க்கையை போலி பக்தியோடு நடத்தி முடித்து நரகத்திற்குச் செல்லப்போகிறோமா? என்ன தான் செய்யப்போகிறோம்? சொல்லுங்கள்.

பல உலகப் பெருமைகளை ஒருங்கே தன்னகத்தே கொண்டிருந்த பவுல் (பிலி. 3:5,6), தான் தமஸ்கு செல்லும் வழியில் சந்திக்கப்பட்டது குறித்து கலாத் தியிருக்கு நிருபம் எழுதினபோது, "தம்முடைய குமாரனை நான் புறஜாதி களிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்த பிரியமாயிருந்த போது **உடனே நான் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் யோசனை பண்ணவில்லை**" என்று கூறியுள்ளார் (கலா 1:16). இதுவல்லவா தேவனுக்கடுத்த சிந்தை, கிறிஸ்துவின் சிந்தை, நானும், நீங்களும் இப்படியாக நடந்து கொள்ள வேண்டுமென்று தான் தேவனும், இயேசு ஆண்டவரும் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார்கள்.

ஆகையால், அருமையானவர்களே, தேவனை நேசிக்கும் ஒவ்வொரு வரும், இயேசுவைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொருவரும், ஆவியான வருடைய வார்த்தைகளுக்குப் பயப்படும் ஒவ்வொருவரும், இயேசு ஆண்ட வரால் கொடுக்கப்பட்டு (யோவா 16:13) இன்றைக்கு நம்மைக் கட்டுப்படுத்தி (அப். 20:32) இறுதி நாளில் நம்மை நியாயந்தீர்க்கும் (யோவா 12:48) வல்லமை கொண்ட புதிய ஏற்பாட்டு வசனங்கள், கிறிஸ்து கட்டின **சபை** பற்றியும் (மத். 16:18), அவரால் கிடைக்கும் **இரட்சிப்பு** பற்றியும் (அப். 4:12). அவரால் சொல்லப்பட்ட **உண்மையான ஆராதனை** பற்றியும் (யோவா 4:24) அவர் எதிர்பார்க்கும் **பரிசுத்த வாழ்வு** பற்றியும் (1பேதுரு 1:15) சொல்லும் போதனைகளுக்கு, ஒருவேளை நமக்கு முழுமையாகப் புரியா விட்டாலும், அவைகளுக்கு நம்மை ஒப்புக்கொடுத்து வாழ்வது பரலோக பாக்கியத்திற்கு மிக மிக அவசியம்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் பரலோக பாக்கியத்திற்குத் தகுதி உள்ளவர்களய் வாழப்பரலோகத்தின் தேவன் நமக்கு உதவி செய்வாராக! ஆமென்.

**E.Z.S. ராஜநாயகம்**

# நல்லொழுக்க ஜீவியம் மட்டும் இரட்சிக்கப்படுவதற்கு ஏன் போதுமானதல்ல?

நீங்கள் உணர்கிறீர்களோ இல்லையோ, பெரும்பாலான ஜனங்கள் தங்கள் நற்கிரியைகளை ஆதாரமாகக் கொண்டு இரட்சிக்கப்பட முயற்சிப்ப தால் இழந்துபோகிறார்கள். இது நமக்கு நித்திய ஜீவனை நாடி இயேசு வினிடத்தில் வந்த அந்த பணக்கார வாலிபனை நினைவுப்படுத்துகிறது. நாம் இப்படியாக வாசிக்கிறோம் "அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி; நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் அவரை நோக்கி; எவைகளை என்று கேட்டான் அதற்கு இயேசு; கொலை செய்யாதிருப்பாயாக , விபச்சாரஞ் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக; உன் தகப்ப னையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்தில் அன்பு கூருவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி; இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு; நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய் உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு என்னைப் பின்பற்றி வா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ள வனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, துக்கமடைந்த வனாய் போய் விட்டான் (மத்தேயு 19:16-22).

இந்த சம்பவம் நடந்த காலக்கட்டம் பழைய ஏற்பாட்டின் காலக் கட்ட மாயிருந்து. வேறு விதமாகச் சொன்னால் அந்த காலக்கட்டத்தில் நியாயப் பிரமாணம் யூதர்களைக் கட்டுப்படுத்தியது, எனவே தான், இயேசு நியாயப் பிரமாணம் என்ன செய்யும்படி சொன்னதோ அதைச் செய்யும் படிக்கு அந்த பணக்கார வாலிபனிடம் சொன்னார். அந்த பணக்கார வாலிபன் தான் நித்திய ஜீவனை அடைய வேண்டுமென்றால் பத்து கட்டளைகளை கைக் கொள்ள வேண்டுமென்பதை இயேசுவின் விளக்கம் மூலம் அறிந்து கொண்டு அந்த பத்துக்கட்டளைகளை தான் சிறுவயது முதற்கொண்டு கடைபிடித்ததாக கூறினான். இந்த பத்துக்கட்டளைகளை கைக்கொள்ளுவதைப்பற்றி நாம் சிந்திக்கும் போது இவன் ஒரு நல்ல ஒழுக்கமுடையவனாகத்தான் இருந்திருக்கிறான். வேறு விதமாகச் சொன்னால், எந்த வகையிலும் இவன் ஒரு துன்மார்க்கன் அல்ல. இந்த சம்பவத்தில் இவன் பரலோகம் செல்வதற்கு தன்னை தகுதி பெற்றவன் என எண்ணிக்கொண்டு இயேசுவின் அங்கீகாரத் தைப் பெற்றுக்கொள்ள மட்டும் இயேசுவிடம் வந்தது போல தெரிகிறது. இந்த பணக்கார வாலிபனுடைய விஷயத்தில் நாம் பார்க்கும் போது இவனுடைய

ஒழுக்கமான வாழ்க்கை மட்டும் பரலோகம் செல்வதற்கு போதுமானதல்ல என்று நாம் அறிந்து கொள்ள முடியும். இயேசுவால் இவனுடைய இருதயத்தையும், வாழ்க்கையையும் உற்றுப்பார்த்து இவன் நித்திய ஜீவனை அடைவதற்கு **ஒன்று** தடையாக இருந்ததை காண முடிந்தது.

இவன் ஒரு பணக்கார வாலிபனாக இருந்தபடியால் இவன் தன் நம்பிக்கையை ஐசுவரியத்தின் மேல் வைத்தது போல் தெரிகிறது. எனவே தான் இயேசு அவனைப்பார்த்து உனக்கு உண்டான யாவற்றையும் விற்று தரித்திரருக்குக் கொடு என்று சொன்னார். ஆனால், வசனம் சொல்லுகிறது அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தைகளைக் கேட்டபொழுது துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான். எனவே, **பழைய ஏற்பாட்டில் கூட ஒழுக்கமான வாழ்க்கை மட்டும் ஒருவர் இரட்சிக்கப்பட போதுமானதல்ல** என்று பார்க்கிறோம்.

இதைப்போலவே, புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கும் போது கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டார் நமக்கு சிறந்த முன்னுதாரணமாக உள்ளனர். கொர்நேலியு இத்தாலியா பட்டணம் என்னப்பட்ட பட்டணத்திலே நூற்றுக்கு அதிபதியாக இருந்தான். இவன் தேவ பக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்கு பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான் (அப். 10:1,2). ஆயினும், **கொர்நேலியு இழந்து போனவனாகத்தான் இருந்தான்.** கர்த்தர் இடைபட்டதினால் கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டார், பேதுரு மற்றும் சகோதரர்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டார்கள். பேதுரு அவர்களிடம் பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அப்பொழுது பேதுரு நம்மைப் போலப் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா? என்று கேட்டார். அதுமாத்திரமல்ல, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டார். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக் கொண்டார்கள் (அப். 10:47,48).

மறுபடியுமாக, கொர்நேலியு வாழ்ந்த வாழ்க்கையை நாம் கவனிக்கும் போது இன்றைய நாட்களில் கூட தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்கு பயந்தவனுமாயிருந்து ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பணணிக் கொண்டிருக்கும் ஒருவர் ஒரு நல்ல மனிதர் என்று தான் கருதப்படுவார். ஆயினும் கொர்நேலியு இழந்து போனவராகவே காணப்பட்டார். எனவே, அவருக்கு சுவிசேஷம் கேள்விப்பட வேண்டியது அவசியமாயிருந்தது. அதை விசுவாசிப்பது அவசியமாயிருந்தது, இரட்சிக்கப்பட அதற்கு கீழ்ப்படிவது அவசியமாயிருந்தது, கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட அவசியமாயிருந்தது. ஆனால், இவைகளைச் செய்ய கொர்நேலியு மறுத்திருந்தால் **அவர் எத்தனையோ நற்கிரியைகளை செய்திருந்தாலும் இழந்து போனவராகவே காணப்பட்டிருப்பார்.**

ஒருவர் இரட்சிக்கப்பட நல்ல ஒழுக்கமுள்ள வாழ்க்கை வாழ வேண்டுமென்பது உண்மைதான். அதன் அர்த்தம் என்னவென்றால், ஒருவர் மோசமான மற்றும் தவறான காரியங்கள் செய்வதிலிருந்து தன்னை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும். மேலும், இது ஒருவர் மாம்சத்தின் கிரியையோ அல்லது உலகத்தின் காரியங்களையோ செய்ய முடியாது என்று பொருள் படும். பவுல் கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதினார். அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை யென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசி மார்க்கத்தாரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண் புணர்ச்சிக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை (1 கொரிந்தியர் 6:9,10). மேலும், கொரிந்துவில் இருந்த சகோதரர்கள் உலகத்தோடு கொண்டிருந்த ஐக்கியத்தைப்பற்றி பவுல் அவர்களுக்குச் சொல்லும் போது, விபசாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று நிருபத்தில் உங்களுக்கு எழுதினேன். ஆனாலும், இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர், பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரக ஆராதனைக் காரர், இவர்களோடும் எவ்வளவும் கலந்திருக்கக் கூடாதென்று நான் எழுத வில்லை; அப்படியானால் நீங்கள் உலகத்தை விட்டு நீங்கிப் போக வேண்டிய தாயிருக்குமே. நான் உங்களுக்கு எழுதினதென்ன வென்றால், சகோதரனென் பட்ட ஒருவர் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால் அவனோடே கலந்திருக்கக் கூடாது; அப்படிப்பட்டவனுடனே கூடப் புசிக்கவுங்கூடாது (1கொரிந்தியர் 5:9,11). இங்கே அப்போஸ்தலனாகிய பவுல் உலகத்தின் மக்களோடு எவ்வளவும் கலந்திருக்காமல் வாழ முடியாது என்று சொல்கிறார். ஆனால், கிறிஸ்து வுக்குள் இருக்கும் ஒரு சகோதரன் தேவ பக்தியற்ற வாழ்க்கையை வாழும் போது அவனோடு ஐக்கியம் கொள்ளக்கூடாது என்று தான் சொல்கிறார்.

பவுல் தொடர்ந்து கலாத்தியா நாட்டு சகோதரர்களுக்கு இப்படியாகச் சொல்கிறார். மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன : விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரக ஆராதனை, பில்லிசூன்யம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே. இப்படிப்பட்ட வைகளை செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை யென்று முன்னே நான் சொன்னது போல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்கிறேன் (கலாத்தியர் 5:19,21). பவுல் இது போன்று பல்வேறு வசனங்களில் மேலே குறிப்பிடப்பட்ட பாவங்களில் ஈடுபட்டுக் கொண்டு ஒருவர் தேவனுடைய ராஜ்யம் அல்லது கர்த்தருடைய சபையில் பிரவேசிக்க முடியாது என்று சொல்கிறார். நிச்சயமாகவே, ஒரு கிறிஸ்தவர் இப்படிப்பட்ட பாவமான காரியங்களைச் செய்து விட்டு தேவனைப் பிரியப்படுத்தவே முடியாது. மேலும், இப்படிப்பட்ட பாவமான காரியங்களை செய்யாமல் இருந்தால் மட்டும் ஒருவர் இரட்சிக்கப்பட முடியாது என்பது உண்மையாக இருந்தாலும் கூட, கர்த்தர் விரும்புகிற ஒருவர் இத்தகைய பாவ காரியங்களி லிருந்து தன்னை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும். அதாவது, **பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலக வேண்டும்** (1தெச. 5:22).

சிலர் மற்ற மதங்களில் இருப்பவர்களை விட கிறிஸ்தவர்களுக்கு ஒழுக்க ரீதியாக அதிக சுதந்திரம் கொடுக்கப்படுகிறது என்ற தவறான எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், கிறிஸ்தவர்கள் புகைப் பிடிக்கலாம், மதுபானம் அருந்தலாம், ஒழுக்கக் கேடான காரியங்களில் ஈடுபடலாம், கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தலாம், அசிங்கமாக ஆடைகளை உடுத்திக் கொள்ளலாம் என்று எண்ணுகிறார்கள். நிச்சயமாகவே, வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை அறிந்தவர்கள் அது அப்படி அல்ல என்பதை புரிந்துகொள்வார்கள்.

சிலர் இப்படிப்பட்ட ஒழுக்கக்கேடான காரியங்களை செய்து கொண்டு தங்களையும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பது உண்மை தான். ஆனால், இப்படி செய்வதால் அவர்கள் தேவனை கோபப்படுத்து கிறார்கள். இவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில் ஆத்துமாவை இழந்து போவார்கள்.

ஒருவர் இரட்சிக்கப்படவும், கிறிஸ்தவனாக இருப்பதற்கும் தேவனையும், இயேசுவை அவருடைய குமாரனென்றும் விசுவாசித்தால் மட்டும் போதுமானதல்ல, அவன் தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். அதன்பின்பு கிறிஸ்துவை தேவனுடைய குமார னென்று அறிக்கை செய்ய வேண்டும். கடைசியாக தன்னுடைய பாவங் களிலிருந்து கழுவப்பட ஞானஸ்நானம் பெற வேண்டும். அப்படி ஒருவர் செய்தால் தான் கர்த்தர் அவனை இரட்சித்து தம்முடைய சபையிலே சேர்த்துக் கொள்வார். அதன்பின்பு அவர் ஒரு கிறிஸ்தவனாக மரணபரியந்தம் கர்த்தருக்கு உண்மையுள்ளவனாக இருந்தால் ஜீவகிரீடத்தைப் பெற்றுக் கொள் வான். இவைகளை நாம் வேத வசனங்களில் திரும்ப திரும்ப வாசிக்க முடியும் (மாற்கு 16:15,16; அப். 2:38; மத்தேயு 10:32; அப். 2:47; வெளி 2:10).

இப்போது ஒருவர் நல்ல ஒழுக்கம் உடையவராக இருக்கலாம். தன்னுடைய ஒழுக்கமான வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டு தான் இரட்சிக்கப்பட்டு விட்டதாக நம்பலாம் ஆனால், இவரும் ஒரு துன்மார்க்கனைப் போலவே, அவர் இரட்சிக்கப்பட கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவருடைய நற்கிரியைகள் மட்டும் அவரை இரட்சிக்காது. ஒருவர் நீதியான காரியங்களைச் செய்வதினால் மட்டும் இரட்சிக்கப்பட முடியாது. (எபேசியர் 2:8,9; தீத்து 3:5) எனவே, ஒருவர் தான் இரட்சிக்கப்பட நற்கிரியைகளை மட்டும் சார்ந்திருந்தால் அவர் முதலில் தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும்.

நாம் எல்லோரும் பாவம் செய்திருக்கிறோம் என்று பவுல் சொல்கிறார் (ரோமர் 3:23). ஆகையால், கர்த்தர் இழந்து போனதை தேடவும் இரட்சிக்கவும் வந்தார் என்று நாம் வாசிக்கிறோம் (லூக்கா 19:10). மனிதன் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டுவிட்டதால் கிறிஸ்து மரிக்கவில்லை, மனிதன் இழந்து போனதாலும் அவன் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதாலும் கிறிஸ்து மரித்தார். கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்று பவுல் சொல் கிறார் (1கொரிந்தியர் 15:1-4) மேலும், பேதுரு இதைப் பற்றிச் சொல்லும் போது, ஏனெனில், கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும் படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் பாவங்களினிமித்தம் ஒரு தரம் பாடுபட்டார். அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப் பிக்கப்பட்டார் (1பேதுரு 3:18).

அருமையான நண்பரே, நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா? அப்படியானால் நீ எப்படி இரட்சிக்கப்பட்டாய்? ஒழுக்கமான வாழ்க்கை மூலமாக பரலோகம் செல்ல முயற்சி செய்பவர்களுள் ஒருவராக நீ இருக்கிறாயா? உன்னிலும், உலகத்தின் ஐசுவரியத்திலும், சில மனிதரிலும், சில மனிதனால் ஏற்படுத்தப்பட்ட முறைமையிலும் அல்லது உலகத்தில் ஏதோ ஒன்றின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறாயா? அப்படியென்றால் நீ உன்னுடைய திட்டத்தின் மூலமாக பரலோகம் செல்ல முயற்சி செய்து கொண்டிருக்கிறாய் என்று தான் பொருள். அப்படியானால், அப்படிச் செய்ய முடியாது என்பதை நீ உணர்ந்து கொள்ள வேண்டும். கிறிஸ்துவை அல்லாமல் வேறு யாராலும் உன்னை இரட்சிக்க முடியாது. அவருக்கு கீழ்ப்படிந்து **மரணபரியந்தம் பரிசுத்தமான தேவ பக்தியுள்ள வாழ்க்கையை வாழும் போது** உன்னை இரட்சிப்பதாக மட்டும் இயேசு வாக்குதத்தம் அளிக்காமல், பரலோகத்தில் உனக்கு வாசஸ்தலத்தை அளிப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இவைகளைப் பற்றியது தான் வேதாகமும், கிறிஸ்தவமும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு தேவனுடைய தீர்க்கதரிசி ஒரு விதியை அமைத்தார். அது அன்றும் உண்மையாக இருந்தது, இன்றும் உண்மையாக இருக்கிறது. அவர் இப்படியாகச் சொன்னார். கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன் (ஏரேமியா 10:23). இதை ஒத்துக் கொள்வதற்கு **தாழ்மை** அவசியப்படுகிறது. ஆனால், ஒருவர் இதை ஒத்துக் கொள்ளும் போது ஞானமுள்ளவராகிறார்.

மறுபடியுமாக, நீங்கள் யாராக இருந்தாலும் சரி, நீங்கள் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தாலும் சரி, அதாவது நல்ல வாழ்க்கை வாழ்ந்தாலும் சரி, **நீங்கள் இரட்சிக்கப்படும்படி தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டும்** என நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்போது மட்டுமே நீங்கள் இரட்சிக்கப்படமுடியும் (மாற்கு 16:16) அப்பொழுது மட்டுமே கிறிஸ்து உங்களை **தம்முடைய சபையில்** சேர்த்துக்கொள்வார் (அப். 2:47)

**J.C. Choate** **J.C. சோட்**

## இயேசுவானவர் பூமிக்கு வந்ததின் நோக்கம்

| | |
|---|---|
| யோவான் 6:38 | தேவ சித்தத்தை நிறைவேற்றும்படி |
| லூக்கா 19:10 | இழந்து போனவர்களைத் தேடி இரட்சிக்கும்படி |
| தானி. 9:24 | நித்திய நீதியைக் கொண்டு வரும்படி |
| எபி. 2:14; 1 யோவான் 3:8 | பிசாசையும், அவன் கிரியைகளையும் அழிக்கும்படி |
| மத்தேயு 5:17 | நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றும்படி |
| யோவா 10:10,28 | ஜீவனை, நித்திய ஜீவனைக் கொடும்படி |
| தானி 9:27 | சடங்காச்சாரங்களை ஒழிக்கும்படி |
| எபி. 1:2 | வெளிப்பாடுகளைப் பூரணமாக்கும்படி |

பெண்கள் பகுதி

# முதிர் வயதை நோக்கி வளர்வது

இந்த தலைப்புக்குள் செல்லுவதற்கு முன்பாக மிகவும் மகிழ்ச்சியான ஒரு வேத பகுதியைப் பார்ப்போம்.

**நீதிமான் பனையைப்போல் செழித்து லீபனோனிலுள்ள கேதுருவைப் போல் வளருவான். கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பார்கள். கர்த்தர் உத்தமரென்றும் என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும், விளங்கப்பண்ணும்படி, அவர்கள் முதிர் வயதிலும் கனிதந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்** (சங். 92:12-15).

செழித்து, வளருவான், நாட்டப்பட்டு, கனிதந்து, புஷ்டியாய், பசுமையாயிருப்பார்கள் போன்ற இந்த வார்த்தைகள் எல்லாம் நமக்கு உற்சாகமளிக்கக் கூடியதாய் இருக்கிறது. எப்படி, மக்கள் தங்கள் வயதான காலத்தை அல்லது முதிர் வயதை சமாதானமுள்ளதாக அமைதியாக மாற்றிக் கொள்ள முடியும் என்பது பற்றி பார்ப்போம்.

ஆபிரகாம், சாராள் ஆகிய இருவரின் வாழ்க்கையைப் பற்றி வேதாகமத்தில் மிகவும் மதிப்பாக நமக்கு சில பக்கங்களில் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது, அவர்கள் இருவருக்கும் திருமணமானபோது எந்த வயதில் இருந்தார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால், தேவன் அவர்களை ஊர் என்ற கல்தேயர் பட்டணத்திலிருந்து அழைத்து, கானான் தேசத்துக்கு போன நாள் பரியந்தமும் அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்வு எப்படி துளிர்த்து பூவாய் மலர்ந்தது என்பது பற்றி வேதத்தில் வாசிக்கிறோம். ஆரானிலே இருந்து கானான் வாழ்க்கை, பின்பு எகிப்திலே அந்நியரும், பரதேசிகளுமாய் இருந்த கொஞ்ச காலம் பற்றி நமக்கு தெரியும். பின்பு, அவர்கள் வயது சென்றவர்களானார்கள். மிகுந்த அமைதியாக, சமாதானத்தோடு முதிர் வயதை அடைந்தார்கள். தேவன் மீது வைத்திருந்த அன்பும், அவர்கள் ஒருவருக்கொருவர் வைத்திருந்த அன்பும், மிகவும் ஆழமாக வளர்ந்து கொண்டே சென்றது. அவர்களுடைய விசுவாசமும் முதிர்ச்சி அடைந்து பழுத்த நிலைக்குச் சென்று விட்டது. அசைக்க முடியாத விசுவாசத்தோடு இவர்கள் இருவரும் மரணத்தை சந்தித்தார்கள் என்று வேதத்திலே வாசிக்கிறோம். **இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப் பட்டவைகளை அடையாமல் தூரத்திலே அவைகளைக் கண்டு நம்பி அணைத்துக்கொண்டு பூமியின் மேல் தங்களை அந்நியரும், பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்** (எபி. 11:13). ஆபிரகாமும், சாராளும் விக்கிரக வணக்கம் நிறைந்த காலத்திலே வாழ்ந்தார்கள். தீமை அவர்களைச் சுற்றிலும் இருந்த காலம் அது. ஆனாலும், ஒரு வெற்றியுள்ள வாழ்க்கையையே இவர்கள் வாழ்ந்தார்கள்.

முதிர் வயதை நோக்கி பலராகிய நாம் சென்று கொண்டுள்ளோம். அன்பு, பாசம், நம்பிக்கை, அர்ப்பணிப்பு, விசுவாசம் இவைகளில் நாம் வளர வேண்டும். முதிர் வயதாகும் போது சிலர் கடு, கடு என்றும், வெறுப்போடும் நடந்து கொள்வார்கள், சிலர் மிகவும் பரிசுத்தமாக தங்களைக் காத்துக் கொள்வார்கள். சிலருடைய அந்திய காலம் இளமை கால நாட்களை விட மிகவும் அழகுள்ளதாக காணப்படும். வீட்டிலும், தேவனுக்கு பணிபுரி வதிலும், சமுதாயத்திற்கும் பயனுள்ள வகையில் எப்படி முதியவர்கள் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று பார்க்கலாம்.

1. விசுவாசத்தில் முதிர்ச்சி அடைந்து வளர வேண்டும்.
2. நம்பிக்கையில் வளர்ந்தேற வேண்டும்.
3. அன்பில் வளர்ந்து முதிர்ச்சி பெற வேண்டும்.
4. பொறுமையில் வளர வேண்டும்.
5. நன்றியாய் இருப்பதில் வளர்ந்து முதிர்ச்சி அடைய வேண்டும்.
6. ஞானத்தில் வளர வேண்டும்.
7. சேவை செய்வதில் வளர்ந்து தேற வேண்டும்.
8. மகிழ்ச்சியாய் இருப்பதில் வளர்ந்தேற வேண்டும்.
9. போதுமென்ற மனது, அதாவது திருப்தி அடைவதில் வளர்ந்து செல்ல வேண்டும்.
10. பிறருக்கு உதவி செய்வதில் வளர்ச்சி அடைய வேண்டும்.
11. தேவனுக்குள் வளர்வதில் முதிர்ச்சியடைய வேண்டும்.

முதுமையை எட்டப் போகும் நாம் மேற்கண்ட காரியங்களில் நம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். கடைசியாக பார்த்த, தேவனுக்குள் வளர்ந்து முதிர்வயதையடைய வேண்டும் என்பதில் வேதாகமத்தில் அப்படி வாழ்ந்த ஓரிரு முதியவர்களைப் பற்றிப் பார்ப்போம். ஆதியாகமத்தின் ஆசிரியர் கூறும் போது, **பிற்பாடு ஆபிரகாம் நல்ல நரை வயதிலும் முதிர்ந்த பூரண ஆயுசிலும் பிராணன் போய் மரித்து தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்** (ஆதி. 25:8). என்று வாசிக்கிறோம். ஈசாக்கைப் பற்றிக் கூறுகையில் **பிராணன் போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான். அவன் குமாரராகிய ஏசாவும், யாக்கோபும் அவனை அடக்கம் பண்ணினார்கள். ஆதி. 35:29. தாவீது இராஜாவைப் பற்றி பார்க்கும் போது, அவன் தீர்க்காயுசும், ஐசுவரியமும், மகிமையுமுள்ளவனாய் நல்ல முதிர் வயதிலே மரண மடைந்த பின், அவன் குமாரனாகிய சாலமோன் அவன் ஸ்தானத் திலே அரசாண்டான்** (1 நாளா 29:28). பழைய ஏற்பாட்டிலே வாழ்ந்த இந்த மூவரும் நல்ல முதிர் வயதிலே நீண்ட காலம் வாழ்ந்தவர்களாய் மரித்தார்கள். காரணம் தேவனுக்காக வாழவேண்டும் என்று முடிவு பண்ணி வாழ்ந்தார்கள். அவர்கள் பூரண புருஷர்களல்ல, ஆனால் பூரணராகும்படியான வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

முதிர் வயதை அடையப் போகும் நாம் வயதில் மட்டும் முதிர்ச்சி யடையாமல் தேவனுக்கும், சமுதாயத்திற்கும் சேவை செய்வதில் முதிர்ச்சி யடைய வேண்டும். வேலை செய்வதிலும், தேவனுக்கு ஆராதனை

செய்வதிலும் முதிர்ச்சியடைய வேண்டும். பிறரை தேவனிடத்தில் அழைத்து வருவதில் முதிர்ச்சி தேவை. பரிசுத்தத்திலும், நம்பிக்கையிலும் முதிர்ச்சி அவசியம். சத்தியத்திலும், ஆவிக்குரிய காரியங்களிலும் முதிர்ச்சியடைய வேண்டும்.

தேவனுக்குள் நாம் மரிக்க வேண்டுமானால் தேவனுக்குள் வாழ்ந்து முதுமையை எய்த வேண்டும். தேவனுக்குள் வாழ்வதென்றால், இளமைக் காலந்தொட்டே தேவனுக்குள் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

தேவனுக்குள் வாழ்ந்து முதிர்ச்சியடைந்த ஸ்திரீகளில் அன்னாள் (லூக்கா 2:36-38) மிகவும் பாராட்டுக்குரியவர். பிரியமான வைத்தியனாகிய லூக்கா ஆசிரியர் இந்த ஸ்திரீயைப் பற்றி கூறுகையில் **ஆசேருடைய கோத்திரத்தாரும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள். அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானது முதல் ஏழுவருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயது சென்ற வளுமாயிருந்தாள்.**

**ஏறக்குறைய 84 வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல் இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள்.**

**அவளும் அந்நேரத்திலே வந்து நின்று கர்த்தரை புகழ்ந்து எருசலேமிலே மீட்புண்டாக்க காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்து பேசினாள்.** மூன்று வசனங்களில் இவள் பேசப்பட்டிருந்தாலும் தன் முதிர் வயதிலேயும் தேவனுக்காக காத்திருந்து வாழ்ந்ததினால் இவளை பரிசுத்த ஆவியானவர் மறக்காமல் இவளை நினைத்து எழுதி வைத்துள்ளார்.

யோவானின் தாய், தகப்பனும் அப்படித்தான் **அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும், நியமங்களின் படியேயும், குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந் தார்கள்.** (லூக்கா 1:6). அடுத்த வசனத்திலே பார்க்கும் போது, **இருவரும்** வயது சென்றவர்களாயுமிருந்தார்கள் (1:7) என்று பார்க்கிறோம். எவ்வளவு காலம் வாழ்ந்து மரித்தார்கள் என்று நமக்கு தெரியாது. ஆனால், அவ்வளவு காலமும் தேவனுக்குள் வாழ்ந்து முதுமையை கழித்தார்கள். கிறிஸ்துவுக்காக கணவனும், மனைவியும் வாழ்ந்து முதிர்ச்சியடையும் போது அது எவ்வளவு ஒரு பாக்கியமான நிலையாய் இருக்கிறது! அர்த்தமுள்ள வாழ்க்கையாய் அது இருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இதை வாசித்த பிறகு நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். கர்த்தர் கொடுத்த இந்த பூமிக்குரிய வாழ்க்கையை வீணாகக் கழிக்காமல் கர்த்தருக்குள் வாழ்ந்து மரிக்க பிரயாசை எடுப்போம். வெறுமனே வயதிலே முதிர்ச்சியடையாமல், நம் முதிர்ச்சி ஆவிக்குரிய வகையிலும் இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்வோம்.

வேதத்தில் கொடுக்கப்பட்டிருக்கும், முதியவர்களைப் பற்றி பார்த்தோம். நாமும் அவ்வாறு வாழ முயற்சி எடுப்போம். அது நமக்கும், நாம் சார்ந்துள்ள கிறிஸ்துவின் சபைக்கும், நம் குடும்பத்தாருக்கும், பிள்ளை களுக்கும் ஆசீர்வாதமாக இருக்கும். ஆமென்!

**ரேச்சல் ராஜநாயகம்**

வாலிபர் பகுதி

# எகிப்தை விட்டுப் போனான்...

சரீர பிரகாரமான வாழ்க்கையிலும் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் கொஞ்சமும் மாசில்லாமல் வாழ்ந்து, வாலிபர்களாகிய நமக்கு இன்றைக்கும் என்றைக்கும் முன் மாதிரியாக இருக்கிற நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே உங்களை வாழ்த்துகிறேன். நம்முடைய பரிசுத்த வேதாகமத்தை தியானிக்கின்ற போது எத்தனையோ பரிசுத்தவான்கள் கர்த்தருக்காகவே வாழ்ந்து மரித்து போயிருக்கிறார்கள். ஆனால் அவர்களில் சிலருடைய விசுவாசங்கள் நம்மை பிரமிக்க வைத்திருக்கிறது. இப்படியும் தேவனுக்காக வாழ முடியுமா என்று யோசிக்கவும், சிந்திக்கவும் வைத்திருக்கிறது. அவர்களில் சிலருடைய விசுவாசம் தேவனாலே புகழப்பட்டும் இருக்கிறது.

அப்படி தேவன் புகழ்ந்த பரிசுத்தவான்களில் மோசேயும் ஒருவர். இவரைக் குறித்து தேவனே "பூமியிலே சாந்த குணமுள்ள மனிதன்" (எண் 12:3) என்று சாட்சியும் கொடுத்திருக்கிறார். அதுமாத்திரமல்ல "தேவனுடைய சிநேகிதன்" (யாத் 33:11) என்றும் பரிசுத்த ஆவியானவராலே அழைக்கப் பட்டும் இருக்கிறான். இப்படி தேவனால் புகழப்பட்ட மோசேயைக் குறித்து பரிசுத்த ஆவியானவர். புதிய ஏற்பாட்டு பக்கங்களில் எபிரெயர் ஆசிரியரைக் கொண்டு சொல்லும் போது "கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்" (எபி. 11:26) என்று சொல்லி கிறிஸ்துவின் காலத்தில் வாழக்கூடிய நம்மையே ஆச்சரியப்பட வைக்கிறார்.

வாலிப சகோதரர்களே இங்கே பாருங்கள் கிறிஸ்துவின் காலத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த இந்த மோசே இயேசு கிறிஸ்துவை பார்க்காமல் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணி இருக்கிறார் என்றால் அவருடைய விசுவாசம் எப்படிபட்டது என்று யோசித்துப் பாருங்கள். மேலும் பரிசுத்த ஆவியானவர் சொல்லும் போது பவுலைப் போல மோசேயும் தனக்கு இலாபமாயிருந்தவைகளையெல்லாம் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று விட்டு குப்பையுமாக எண்ணி இருக்கிறார் என்று சொல்லுகிறார். அதைக் குறித்து இக்கட்டுரையின் வாயிலாக கற்று வாழ்க்கையில் பயன்படுத்துவோம்.

## I. ராஜாவின் குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்தான்

நம்முடைய பரிசுத்த ஆவியானவர் வாலிபர்களாகிய நமக்கு கொடுக்கும் முதல் பாடம் கிறிஸ்துவினிமித்தம் வரும் பலனுக்காகவும், நிந்தைக்காகவும் மோசே "பார்வோனுடைய குமாரத்தியின் மகன் எனப்படு வதை வெறுத்தான்" (எபி. 11.24) என்று விளம்பி இருக்கிறார்.

அருமையான வாலிபர்களே கொஞ்சம் இந்த வசனத்தை சிந்தித்து பாருங்கள். பார்வோனின் குமாரத்தியின் மகன் எனப்படுவதை மோசே வெறுத்தான் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. பிரியமானவர்களே, மோசே இங்கு ராஜாவின் மகன் என்ற பெரிய சிலாக்கியத்தையே வெறுத்து இருக்கிறார்.

நாம் சரீர பிரகாரமான யோசனையில் மோசேயை பார்ப்போம் என்றால் அவரை "பிழைக்க தெரியாத ஆள்" அல்லது "முட்டாள்" என்று சட்டென்று கூறி விடுவோம். ஆனால் ஆவிக்குரிய ரீதியில் பார்த்தோமானால் மோசே சரியான முடிவைத்தான் எடுத்து இருக்கிறார் என்று உறுதியாக நாம் கூற முடியும். ஆனால் மோசேயின் விசுவாசத்தைக் குறித்து நாம் சற்று தியானிப் போம் என்றால் உண்மையாய் நமக்கு பிரம்மிப்பைத் தரக்கூடியதாகத்தான் இருக்கிறது.

ஏனென்றால், மோசேயின் காலத்தில் இயேசு கிறிஸ்து பிறக்காமல் பல நூற்றாண்டுகளுக்கு பிறகு தான் பிறந்திருக்கிறார். இயேசு கிறிஸ்துவுக்காகவும் அவருடைய மீட்புக்காகவும் அன்றைக்கு தனக்கு இலாபமாயிருந்த "பார்வோனின் குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்து" அவைகளை நஷ்டமென்று விட்டு இருக்கிறார். மேலும் "பார்வோனின் குமாரத்தியின் மகன் எனப்படுவதை வெறுத்தான்" என்று பார்க்கின்ற போது யோவான் ஆசிரியர் சொன்னது போல "ஜீவனத்தின் பெருமையை" (1யோவா 2:16) விட்டு இருக்கிறார். அதே போல நாமும் நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்திற்கு எது தடையாக இருக்கிறதோ அவைகளைக் களைந்து எறிய வேண்டும். ஏனென்றால், நாம் கிறிஸ்துவின் காலத்திலும் ராஜியத்திலும் பங்குள்ள வர்களாக இருக்கிறோம். ஆகையால் நம்முடைய ஜீவனத்தின் பெருமை களை ஒழித்து விட்டு பாரமாய் இருக்கிறவைகளை தள்ளி விட்டு நமக்கு நிய மித்திருக்கிற ஓட்டத்திலே பொறுமையோடே ஓட வேண்டும் (எபி. 12:1)

**II. <u>அநித்தியமான பாவ சந்தோஷங்களை வெறுத்தான்</u>**

நம்முடைய பரிசுத்த ஆவியானவர் நமக்கு கொடுக்கும் இரண்டாவது பாடம் "கிறிஸ்துவினிமித்தம் வரும் பலனுக்காகவும், நிந்தைக்காகவும் மோசே அநித்தியமான பாவ சந்தோஷங்களை வெறுத்தான்" (எபி. 12:25) என்று சாட்சி பகருகிறார்.

பரிசுத்த ஆவியானவர் எபிரெயர் ஆசிரியரைக் கொண்டு சொல்லும் போது எகிப்தின் சந்தோஷமாக இருந்தாலும் அல்லது இந்த உலகத்தின் சந்தோஷமாக இருந்தாலும் அது "அநித்தியமான பாவ சந்தோஷம்" என்றே கூறுகிறார். ஆனால், இதை அறியாத அநேக வாலிபர்கள் "வாழ்க்கை வாழ்வதற்கே இளமை போனால் திரும்ப வராது ஆகையால் சந்தோஷமாய் வாழ்வதற்கு எதை வேண்டுமானாலும் செய்யலாம்" என்ற கொள்கையோடு பாவ வாழ்க்கையில் சொகுசாய் வாழந்து கொண்டு இருக்கிறார்கள். இன்றைய நவீன யுகத்தில் வாலிபர்கள் மதுபானம் குடிப்பது, புகை பிடிப்பது, பெண்களோடு ஊர் சுற்றுவது இதுதான் தங்களுடைய வாழ்க்கையில் மிகப்பெரிய சந்தோஷம் என்று நினைத்து கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால், மோசே இவைகளை "அநித்தியமான பாவ சந்தோஷம்" என்று நினைத்து அதை வெறுத்தார். எதை விரும்பி இருக்கிறார் பாருங்கள் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை விரும்பி இருக்கிறார். தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு இருக்கிறார் (எபி 11:23). யோவான் ஆசிரியர் சொல்வதைப்போல மாம்சத்தின் இச்சைகளை (1யோவா 2:16) மோசே விட்டு இருக்கிறார். ஆகையால் நம்முடைய வாழ்க்கையில் அநித்தியமான பாவ சந்தோஷங்

களை விட்டு கிறிஸ்துவுக் காகவும் அவருடைய இராஜ்ஜியமாகிய சபைக் காகவும் வாழ வேண்டும். கிறிஸ்துவினிமித்தம் அநித்தியமான பாவ சந்தோஷங்களை நஷ்டமென்று விட வேண்டும் மேலும் நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவங்களையும் தள்ளிவிட்டு நமக்கு நியமித்திருக்கிற ஒட்டத்தில் பொறுமையோடே ஓட வேண்டும் (எபி 12:1).

**III எகிப்திலுள்ள பொக்கிஷத்தை வெறுத்தான் :**

நம்முடைய பரிசுத்த ஆவியானவர் நமக்கு கொடுக்கும் மூன்றாவது பாடம் கிறிஸ்துவினிமித்தம் வரும் பலனுக்காகவும் நிந்தைக்காகவும் மோசே "எகிப்திலுள்ள பொக்கிஷங்களை வெறுத்தான்" (எபி. 11:26) என்று மெச்சுகிறார்.


பரிசுத்த ஆவியானவர் எபிரெயர் ஆசிரியரைக் கொண்டு சொல்லும் போது எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் (எபி. 11:20) என்று சொல்லி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். அருமையான வாலிபர்களே, மோசேயை பாருங்கள். எனக்கு எகிப்திலுள்ள பொக்கிஷங்கள் வேண்டாம் கிறிஸ்துவினி மித்தம் வரும் நிந்தைதான் வேண்டுமென்று விரும்பி இருக்கிறார் என்றால் அவருடைய விசுவாசத்தை எப்படி வர்ணிப்பது என்றே தெரிய வில்லை. இயேசு கிறிஸ்துவை பிசாசானவன் சோதித்த போது "உலகத்தின் ராஜ்ஜியங் களை ஒரு நிமிஷத்திலே காண்பித்து என்னை பணிந்து கொண்டால் இவை களை உமக்குத் தருவேன்" என்று கண்களின் இச்சையை தூண்டின போது, இயேசு கிறிஸ்து அவனை நோக்கி "எனக்கு பின்னாகப் போ சாத்தானே" (லூக். 4:5-8) என்று சொல்லி கண்களின் இச்சையை மேற்கொண்டாரே அதே போல் மோசே எகிப்திலுள்ள பொக்கிஷங்களை நிராகரித்து கிறிஸ்து வினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணி எகிப்தை விட்டு போய் இருக்கிறார் (எபி. 11:26,27) அப்படிப் போனது யோவான் ஆசிரியர் சொன்னது போல "கண்களின் இச்சையையும்" (1யோவா 2:16) அவர் ஜெயித்து இருக்கிறார் என்று நம்மால் நிச்சயமாக புரிந்து கொள்ள முடியும்.

பிரியமான வாலிபர்களே, நாம் எப்படி இருக்கிறோம், கிறிஸ்துவுக்காக நாம் எதை இழந்து இருக்கிறோம் என்று யோசித்து பாருங்கள். ஞாயிற்று கிழமையில் சபையின் ஆராதனைக்கு வராமல் வேலைக்கு போகக்கூடிய வாலிபர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். கிறிஸ்துவுக்காக ஒரு நாள் சம்பளத்தை இழக்க நாம் யோசிக்கிறோம். கிறிஸ்துவின் காலத்தில் வாழாத மோசேயே அவருக்காக தன்னையே ஒப்புக்கொடுத்து வாழ்ந்து இருக்கிறார் என்றால், பரம ஈவை ருசி பார்த்த நாம், கிறிஸ்துவுக்காக எப்படி வாழ வேண்டும் என்று சிந்தித்து பாருங்கள். மோசேயைக் காட்டிலும் நாம் கிறிஸ்துவுக்காக சிறப்பாக வாழ வேண்டாமா, ஆகையால் நமக்கு இலாபமாய் இருக்கிறவைகளை எல்லாம் கிறிஸ்துவுக்காக குப்பையுமாக விட்டு விசுவாசத்தை துவக்கினவரும் முடிக்கிறவருமாகிய இயேசு கிறிஸ்து வை நோக்கி நம்முடைய ஓட்டத்திலே பொறுமையோடே ஓடக்கடவோம். ஜீவ கிரீடத்தை பெறுவோம் ஆமென்.

**N. பர்னபாஸ்,** திருப்பூர்.

சிறுவர் பகுதி

# ஒளி கொண்ட கடல் மீன்



எனதருமை சிறு தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மாதந் தோறும் வெளி வரும் செய்திகள் உங்களுக்கு பிரயோஜனமாய் இருந் திருக்கும் என நம்புகிறேன். இம் மாதம் நாம் இதுவரை கேள்விப்படாத ஒரு வகை மீன் பற்றி பார்க்கப் போகிறோம். இது, நாம் கண்டிராத, கேட்டிராத வித்தியாசமான ஒரு மீன். நம் தேவனின் மகத்துவத்தை இம்மீன் பற்றிப் படிப்பதின் மூலம் மேலும் தெரிந்து கொள்ளலாம். படிக்கலாமா?

எதையும் காணமுடியாத நிலையில் கும் இருட்டாக இருக்கும் மிக ஆழமான கடல் பகுதியில் நீங்கள் நீந்த நேர்ந்தால் எப்படியிருக்கும் என்று எண்ணிப்பாருங்கள்! சுற்றி சுற்றிப் பார்த்தாலும் எல்லாமே இருட்டாகவே இருக்கும். அப்படித் தானே! அந்நேரத்தில் உங்கள் சரீரத்தில் டார்ச் லைட் (Flash Light) கட்டினால் போல், வெளிச்சம் தரும் ஓர் உறுப்பு இயற்கை யாகவே இருக்கு மானால் எப்படியிருக்கும்? நன்றாக இருக்கும். ஆமாம் தானே.

நீங்கள் நம்பினாலும் நம்பா விட்டாலும் வெளிச்சம் தரும் ஒரு உறுப்பைக் கொண்ட ஒருவகை மீன், கடலின் ஆழத்தில் உள்ளது. இப்படி அந்த மீனுக்கு, வெளிச்சம் தரும் உறுப்பு, பருமனற்ற, வளையும் தன்மை கொண்ட ஒரு கொம்பு போல அவ்வகை மீனின் கீழ்த்தடையருகில் வளர்ந்திருக்கும். அப்படி நீண்டி ருக்கும், வளையும் தன்மை கொண்ட உறுப்பின் நுனிப்பகுதியில் வெளிச்சம் இருக்கும். இந்த ஒளியைப் பார்க்கும் மற்ற வகை மீன் வெளிச்சம் என்ன என்று பார்க்கக்கிட்டே வரும். அப்பொழுது இந்த **ஒளி கொண்ட மீன்** வாயை திறந்து அதைத் தனக்கு உணவாக்கிக் கொள்ளும்!

கடலின் ஆழத்திற்குச் செல்லச் செல்ல சூரிய ஒளி குறைவாகவே இருக்கும். அதிக பட்சமாக 375 அடி ஆழம் வரை தான் சூரிய வெளிச்சம் கடலுக்குள் ஊடுருவிச் செல்லும். அதற்குக் கீழே, சரியான இருட்டாகவே இருக்கும். இருப்பினும் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் மீன் தனக்குத் தேவையான வெளிச்சத் தைத்தானே உண்டாக்கிக் கொள்ளும் திறனுடையதாக இருக்கிறது. எப்படி?

இவ்வகை மீன், கண், வால் அல்லது செதில் பகுதியில் சிறு பை போன்ற ஒன்றைக் கொண்டுள்ளது. அப்பைகளில், ஒளியை உண்டாக் கக் கூடிய ஏராளமான நுண் கிருமிகள் வாழ்கிறது. இவை **சுற்றுப்புறம்** அதிக இருட்டாக மாறும் போது, அதிக வெளிச்சத்தை உண்டாக்கு கிறது. இவ்வகை மீன்களில் சிலவற் றிற்கு, அச்சிறுபைகளை **மூடித் திறக்கும்படியான கதவுகள்** உள்ளது. தான் இருப்பது தெரியக் கூடாது என நினைத்தால், அவைகள் அந்தக் கதவுகளால் அப்பைகளை மூடிக் கொள்ளும். மற்ற சமயங் களில் ஒளியை உண்டாக்கக் கதவு களைத் திறந்து கொள்ளும்.

சில விஞ்ஞானிகள், தனக்கு உணவைப் பெற்றுக்கொள்ள இவ்வகை மீன்கள் வெளிச்சத்தைப் பயன்படுத்துகின்றன என்கிறார்கள். வேறு சிலர் இனப்பெருக்கம் செய் வதற்குத் தேவையான ஜோடியைத் தன் பக்கம் ஈர்க்க வெளிச்சத்தைப் பயன்படுத்துகின்றன என்கிறார்கள். ஒரு வேளை, நாம் அறியாத வேறு காரணங்கள் கூட இந்த வெளிச்சத் திற்கு இருக்கலாம்.

இந்த வகை மீன்களை எண்ணிப்பார்க்கவே ஆச்சர்யமாக இருக்கிற தல்லவா? இதை யார் இவ்வளவு அழகாக, ஆச்சர்யப்படும் படியாக வடிவமைத்தது? எந்த சந்தேகமும் இல்லாமல் **யெகோவா வாகிய நம் தேவன் தான்.**

நம்முடைய வல்ல தேவன், எல்லா படைப்புகளையும், அவை கள் வாழும் சூழ்நிலைக்கேற்ப, அவைகள் சிறியதாக இருந்தாலும், பெரியதாக இருந்தாலும், நிலத்தில் வாழ்ந்தாலும், நீரில் வாழ்ந்தாலும், ஆகாயத்தில் வாழ்ந்தாலும் மிக நேர்த்தியாகப் படைத்திருக்கிறார். எவ்வளவு பெரிய தேவன் நம் தேவன் தெரியுமா?

இந்த ஞானமுள்ள தேவ னுக்கு நாம் இச்சிறு வயது முதல், கீழ்ப்படிந்து வாழ்ந்து, நிறைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும். சிறுபிள்ளை களாகிய நம்மை அவர் ஆசீர்வதிக்க எப்பொழுதும் ஆர்வமுள்ளவராக வே இருக்கிறார்.

சரியா அடுத்த மாதம் சந்திப்போம்.

**R.A.R. நாயகம்**

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கடந்த பல மாதங்களில், கள்ளப்போதகர்கள் எழும்புவார்களென்றும், புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்தும், இயேசு ஸ்தாபித்த ஒன்றான மெய் சபையிலிருந்தும், வழிவிலகிச் செல்லுதல் இருக்கும் என்பது பற்றிய தேவனுடைய புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை நாம் படித்தோம். அதன்பின்பு, கடந்த மாதத்தில் அந்த குறிப்பிடத்தக்க தீர்க்க தரிசனங்கள் எப்படி நிறைவேறியது என்பதை நாம் கற்றுக் கொண்டோம்.

அந்த வழிவிலகிச் செல்லுதல் பற்றிய உதாரணங்கள்; பிஷப்பின் பதவி உருவாக்கப்படுதல்; பிராந்திய ஆலோசனைச் சங்கங்களின் வளர்ச்சி; மதகுருக்களாக பதவியில் அமர்த்தப்பட்ட விசேஷித்த மனிதர்களின் உருவாக்கம்; ஒரு பிஷப், ஒரு பகுதியில், ஒரு மாகாணத்தில், ஒரு தேசத்தில், அல்லது ரோம சாம்ராஜ்யத்தில் இருந்த எல்லா சபைகளையும் கட்டுப்படுத்துவதின் வளர்ச்சி ஆகியவைகளை உள்ளடக்கியது.

மேலும், பட்டணத்தில் இருந்த பிஷப்கள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு தங்களுடைய ஆதிக்கத்தை மற்றவர்கள் மீது செலுத்தத் தொடங்கினார்கள். அடுத்ததாக அந்த பிஷப்களின் மீது தலைமை மத குரு நியமிக்கப்பட்டார். ஆனால், புதிய ஏற்பாட்டில் தலைமை மதகுரு என்ற பட்டம் அல்லது பதவி போன்றவை குறிப்பிடப்படவில்லை. அதன் பின்பு ரோம சாம்ராஜ்யத்தின் ஒவ்வொரு பெரிய பிரிவுகளின் மீதும் ஒரு "முற்பிதா" நியமிக்கப்பட்டார். கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு மாதிரியில் இப்படிப்பட்ட பதவி இல்லாத போதும் இப்படியாக நியமிக்கப்பட்டார். சுமார் கி.பி 300ல் ரோம, அலெக்ஸ்சாண்திரியா, அந்தியோகியா, எருசலேம், மற்றும் கான்ஸ்டான்டிநோபிள் ஆகிய இடங்களில் ஐந்து முக்கிய முற்பிதாக்கள் நியமிக்கப்பட்டனர். இதில் தான் நாம் கடந்த மாதம் விட்டிருந்தோம். கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்து தொடர் வழி விலகிச் செல்லுதலின் அடுத்தபடி இதோ.

## அந்த ஐந்து முற்பிதாக்களுக்குள் யார் பெரியவர் என்ற போட்டி

இந்த ஐந்து முற்பிதாக்கள் ஒவ்வொருவரும் உலகளாவிய முற்பிதா என்ற பட்டத்தைப் பறித்துக்கொள்ளப் போராடினார்கள். ஆறாம் நூற்றாண்டின் கடைசி பகுதிக்குள், அந்தப் பேராட்டமானது ரோம், மற்றும் கான்ஸ்டான்டிநோபிள் ஆகிய பட்டணங்களுக்குள் அடங்கிவிட்டது.

588ல் கான்ஸ்டான்டிநோபிளின் பிஷப் **உலகளாவிய பிஷப்** என்ற பட்டத்தை தானாகவே எடுத்துக்கொண்டார். இதை ரோமின் பிஷப் கண்டித்து, அது வீணானது என்றும், கிறிஸ்தவர்களுக்கு விரோதமானது என்றும், தேவ தூஷணமானதென்றும், பிசாசுக்கடுத்தக்காரியம் என்றும் சொன்னார். ஆயினும், பதினெட்டு வருடங்களுக்குப் பின்பு கி.பி. 606ல் ரோமில் மற்றொரு பிஷப் "போனிபேஸ்II" உலகளாவிய பிஷப் என்ற பட்டத்தை தானாகவே வகித்துக்கொண்டான். இந்த பழக்கம் அல்லது முறை தான்

இன்றைய நாள் வரை கத்தோலிக்க சபையிலே போப் முறை என்ற பெயரிலே இருந்து வருகிறது.

தயவு செய்து இந்த அர்த்தமுள்ள, மிக முக்கியமான கேள்வியை கருத்தில் கொள்ளுங்கள்.

**இவைகள் எல்லாம் ஏன் நடந்தது?**

எனவே, தேவன் முன்னறிவித்தபடியே கீழ் காண்பவைகள் நிறைவேறின

1. கள்ளத்தீர்க்கதரிசிகள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு எழும்பினார்கள். (மத்தேயு 7:15)
2. மூப்பர்களிடமிருந்தும் சிலர் எழும்பி சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளுவார்கள் (அப். 20:28-32).
3. அவர்கள் சுவிசேஷமாகிய விசுவாசத்தை விட்டு விலகிச் சென்றார்கள் (1தீமோத் 4:1-3).
4. அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி கட்டுகதைகளுக்கு சாய்ந்து போவார்கள் (2தீமோத் 4:3,4).
5. அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு சத்தியத்தை நேசிக்கவில்லை. (2 தெச 2:10-12).
6. அவன் எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் (2தெச 2:3,4).

**இந்த ரோமக் கத்தோலிக்க சபையானது தோராயமாக 606-1520 கி.பி. வரை சக்தி வாய்ந்த ஒன்றாக இருந்தது.**

இந்த காலகட்டத்தில் ஏற்பட்ட சில முக்கியமான வளர்ச்சியை தயவு செய்து கவனியுங்கள்.

இந்தத் தவறான சபைக்கும், தேச அரசாங்கத்திற்கும் இடையில் ஒரு உறவு இருந்தது. அது "பரிசுத்த ரோம சாம்ராஜ்யமாக" அழைக்கப்பட்டது. நிச்சயமாகவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு நல்ல பிரஜையாக இருக்க வேண்டும். தேசச்சட்டம் தேவனுடைய பிரமாணத்தை மீறாத வரை தேச சட்டத்திற்கு ஒரு கிறிஸ்தவன் கீழப்படிய வேண்டும் (ரோமர் 13:1-6; அப். 5:29). ஆயினும், கிறிஸ்துவின் சபையானது அரசாங்கத்தோடு இணைந்து ஐக்கியமாயிருக்க வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் எந்த இடத்தில் சொல்லப்பட இல்லை.

1049ல், லியோ IX ராணுவம் வைத்திருந்த முதல் போப் ஆனான். தேவன் 2கொரிந்தியர் 10:3,5 வசனங்களில் சொல்லியிருக்கிறவைகளோடு இதை ஒப்பிட்டுப்பாருங்கள். அப்போஸ்தலனாகிய பவுல் மூலமாக தேவன் ஒரு காரியத்தை தெளிவுபடுத்தியிருக்கிறார். "நாம் மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல". அதாவது, உண்மையான கிறிஸ்துவின் சபை, இந்த தவறான சபை கடந்த காலத்தில் செய்தது போல போர் செய்கிறதில்லை.

உண்மையாகவே, தேவன் பவுலை எழுத ஏவினது போல நம்முடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளல்ல! இதன் அர்த்தம் என்னவென்றால் கிறிஸ்துவின் சபை மாம்சப்பிரகாரமான ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை. மாறாக, வேத வசனமாகிய ஆவியின் பட்டயம் உட்பட

தேவன் நமக்குள் தந்திருக்கிற தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக் கொண்டு விசுவாசத்தின் நல்லப் போராட்டத்தைப் போராடுகிறோம் (எபேசி 6:10-17).

1054ல் கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய கத்தோலிக்க சபைகளில் பிளவு ஏற்பட்டது. அதன் விளைவாக ரோமக்கத்தோலிக்க சபை என்றும் கிரேக்க ஆர்த்தோடக்ஸ் சபை என்று இரண்டு பிரிவுகள் உருவானது.

1074ல் ரோமக் கத்தோலிக்க சபை பாதிரியார்கள் திருமணம் செய்ய தடைவிதித்தார்கள். தயவு செய்து 1தீமோத்தேயு 4:1-3 வசனங்களில் நாம் படித்த காரியங்களை நினைவில் கொள்ளுங்கள். பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் என்று தேவன் முன்னறிவித்தார்.

கிறிஸ்துவின் புதிய ஏற்பாடாகிய விசுவாசத்திலிருந்து வழிவிலகிச் சென்றவர்கள் எதை போதித்தார்கள்? விவாகம் பண்ணாதிருக்க வேண்டும் என்று போதித்தார்கள்! மறுபடியும் தேவன் முன்னறிவித்தபடியே நடந் தேறியது. தவறான சபையாகிய ரோமக்கத்தோலிக்க சபையில் நாம் இதை காண முடியும்.

1096ல் ரோமக் கத்தோலிக்க சபை தங்களுடைய தவறான மதத்திற்கு மக்களை மனமாற்ற இரும்புக்கரத்தை பிரயோகப்படுத்தியது, அதாவது, கத்தோலிக்க சபை அடக்கு முறையைக் கொண்டு தங்கள் மதத்திற்கு மக்களை மாற்ற போர்களைத் தொடுத்தது. இதை எதிர்த்தவர்கள் அநேகர் சமாதான பிரபுவாகிய இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொண்டவர் களால் கொலை செய்யப்பட்டார்கள் (ஏசாயா 9:6). தயவு செய்து இதை கீழ்க் காணும் வசனங்களில் இயேசு சொன்னவைகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

மத்தேயு 5:43,44 வசனங்களில் நாம் பார்க்கும் போது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய சத்துருக்களை சிநேகிக்கும்படி கட்டளையிடுகிறார். அவர்களைக் கொல்லும்படி அல்ல! உண்மையில் நம்மை சபிக்கிறவர்களை நாம் ஆசீர்வதிப்பதும், நம்மை வெறுப்பவர்களுக்கு நன்மைச் செய்வதும், நம்மை துன்படுத்துகிறவர்களுக்காக, நம்மை நிந்திப்பவர்களுக்காக நாம் ஜெபம் பண்ண வேண்டும் என்பதே நம்முடைய அன்புள்ள எஜமானின் சித்தமாகும்.

யோவான் 18:36ல் நாம் வாசிக்கும் போது சமாதானப் பிரபுவாகிய இயேசு தம்முடைய ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல என்று சொல்லி யிருக்கிறார். அதன் அர்த்தம் என்னவென்றால், இயேசுவின் ராஜ்யமாகிய அவருடைய சபை இந்த உலகத்திலே ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால், பரலோகத்திலே ஆரம்பிக்கப்பட்டது. கிறிஸ்துவின் ராஜ்யம் இந்த பூமியிலே ஆரம்பிக்கப்படாதபடியால் நாம் மாம்சப்பிரகாரமான யுத்தங்களிலே ஈடுபடுவதை, சரீரப்பிரகாரமான போராட்டம் போராடுவதை இயேசு விரும்புவதில்லை. முதல் நூற்றாண்டில் கூட இயேசு தன்னை பின்பற்றின வர்கள் தான் யூதர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு சரீரப்பிரகாரமாக போராடுவதை விரும்பவில்லை. யூதர்களிடத்தில் தான் ஒப்புக்கொடுக்கப் பட்டால் என்னுடைய பாவத்திற்காகவும், உங்களுடைய பாவத்திற்காகவும் மரிப்பது உறுதி என்ற உண்மையை அறிந்த போதிலும் இயேசு தம்மை பின் பற்றினவர்களை சரீரப்பிரகாரமாக போராடச் சொல்லவில்லை.

சுமார் 1198ல் வல்லமை பொருந்திய போப்களில் ஒருவரான இன்னசன்ட் III தன்னுடைய ஆட்சியைத் தொடங்கினார், அவர் இப்படியாகச் சொன்னார். “பரிசுத்தப் பேதுருவின் வாரிசு தேவனுக்கும், மனிதனுக்கும் மத்தியில் நிற்கிறார். தேவனுக்குக் கீழே, மனிதனுக்கு மேலே எல்லோருக்கும் நியாதிபதியாக இருக்கிறார். ஆனால், இவர் யாராலும் நியாயந்தீர்க்கப் படுவதில்லை”. பிரியமானவர்களே, தயவு செய்து இந்த தேவதூஷணமான வாக்கியத்தை தேவன் சொல்லுகிறவைகளோடு ஒப்பிட்டுப்பாருங்கள்.

1 தீமோத்தேயு 2:5ல் **தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே** என்று தேவன் தெளிவுபடுத்துகிறார். அந்த ஒரே மத்தியஸ்தர் இன்னஸன்ட் III அல்லது அழிந்து போகிற மனுஷனா?முற்றிலு மாகவே இவர்கள் இல்லை! அந்த ஒரே மத்தியஸ்தர் மனுஷனாகிய இயேசு கிறிஸ்துதான்! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குரியதை தங்களுக்குரிய தென எந்த ஒரு மனுஷனோ, அல்லது மனுஷியோ சொல்லாமல் இருக்க தேவன் காத்துக்கொள்வாராக!.

இன்னஸன்ட் தன்னை பேதுருவின் அடுத்த வாரிசு என்று சொல்லிக் கொண்டார். ஏனென்றால், கத்தோலிக்க சபை பேதுருவை முதல் போப் என்று சொல்லிக் கொள்கிறது. ஆனால், தயவு செய்து பேதுருவின் மனப் பான்மையை இன்னஸன்ட் மற்றும கத்தோலிக்க சபையில் உள்ள மற்ற தலைவர்களின் மனப்பான்மையோடு ஒப்பிட்டுப்பாருங்கள்.

அப். 10:25,26 வசனங்களில் நாம் பார்க்கும் போது கொர்நேலியு பேதுருவுக்கு எதிர்கொண்டு போய் அவர் பாதத்தில் விழுந்து பணிந்து கொண்டார். அப்போது பேதுரு அவனைத் தூக்கி எடுத்து எழுந்திரும், நானும் ஒரு மனுஷன் தான் என்று சொன்னார். இங்கே நாம் பார்க்கும் போது பேதுரு தன்னை மற்ற மனுஷருக்கு முன்பாக உயர்வாக எண்ணவில்லை என்பது விளங்குகிறது.

இன்னஸன்ட் தன்னை எல்லோருக்கும் நியாதிபதியாக சொல்லிக் கொண்டான். மேலும், தான் யாராலும் நியாயந்தீர்க்கப்படுவதில்லை என்றும் சொல்லிக்கொண்டான். மறுபடியும், இதை தேவன் சொல்கிறதோடு ஒப்பிட்டுப்பாருங்கள்.

அப். 17:30,31 வசனங்களை வாசிக்கும் போது எல்லோரையும் நியாயந்தீர்ப்பது யார்? இன்னஸன்ட் III அல்ல! **எல்லோருக்கும் நியாதிபதி இயேசு கிறிஸ்து தான், எந்த மனுஷனும் அல்ல!.**

எல்லாவற்றையும் அறிந்த சர்வ ஞானமுள்ள தேவன் கிறிஸ்துவின் ஒன்றான மெய்சபையிலிருந்தும் அவருடைய புதிய ஏற்பாட்டு மாதிரியி லிருந்தும் வழிவிலகிச் செல்லுதல் இருக்கும் என்பதை துல்லியமாக முன்னறிவித்தது ஆச்சரியமாக உள்ளது. இது வேதாகமம் மனிதனிடத் திலிருந்து வந்ததல்ல தேவனிடத்திலிருந்து வந்தது என்பதை சொல்கிறது. மேலும், இது நாம் புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்து எவ்விதத்திலும் வழிவிலகிச் செல்லாமல் நம்மை நாம் காத்துக் கொள்ள நிச்சயப்படுத்திக் கொளள வேண்டும் என்றும் நம்மை எச்சரிக்கிறது. கர்த்தருக்குச் சித்தமானால், அடுத்த மாதம் நம் பாடத்தை தொடர்ந்து படிக்கும் போது இன்னும் அநேக வழிவிலகிச் செல்லுதல் பற்றி கற்றுக்கொள்வோம்.

***Charlie Dipalma*** ***Benny Martin***

திருமறை ஆசான் வாசகர்களும், அன்பு சகோதர சகோதரிகளுமாகிய உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்திலே வாழ்த்துகிறோம். சுகமாயிருப்பீர்களாக.

அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பு பட்டணத்தாருக்கு தனது நிருபத்தில் பிலிப். 3:12வது வசனத்தில் கூறிய கருத்தைதான் நாம் தியானிக்கப் போகிறோம். அன்பான சகோதர சகோதரிகளே இப்பகுதி நாம் அநேக முறை வாசித்த பகுதிதான்.

உங்களுக்கு மிகவும் பரிச்சயமான காரியங்களையே இதிலே பார்க்கப் போகிறோம்.

## 1. அப்போஸ்தலனாகிய பவுல் (அப். 22:3-4)

பவுல் தர்சு பட்டணத்தில் பிறந்து, கமாலியேலிடம் நியாயப்பிரமாணத்தை கற்றவர், மிகுந்த பக்தி வைராக்கியமுள்ளவர். தனக்கு தெரிந்த நியாயப்பிரமாணத்தையன்றி வேறே பிரமாணத்தை போதிக்கிறவர்களை துன்பப்படுத்துவதோடு மாத்திரமல்ல. **(அப். 9:13)** ஸ்தேவான் கொலை செய்யப்படும் போது சாட்சிக்காரரின் வஸ்திரங்களுக்கு காவல் இருந்தவர். **நம்முடைய பாஷையில் சொன்னால் கொலை பாதகர்.** பவுலுடைய பாஷையில் சொன்னால் **(1தீமோ 1:15) பிரதான பாவி.** ஒரு கட்டத்தில் பவுல் பிரதான ஆசாரியரிடம் நிருபங்களை கேட்டு வாங்கினார். (யோவா 16:2) **பவுல் கிறிஸ்தவ ஊழியர்களைக் கொலை செய்வதை தான் தேவனுக்கு செய்யும் தொண்டு என நினைத்தார்** (அப். 9:14)

## 2. தமஸ்குவிற்கு செல்லும் சாலை (அப். 9:1-20)

நம் யாவருடைய வாழ்விலும் சில மறக்க முடியாத பிரயாணங்கள் உண்டு. ஆனால் பவுலுடைய வாழ்வின் பாதையை தலைகீழாக மாற்றிய ஒரு நகரம் இந்த தமஸ்கு பட்டணத்தை தான் சொல்லலாம் (2ராஜா 5:1-5) **இது சீரியாவின் தலைநகர். 1. கிறிஸ்தவர்களை கொல்லச் சென்றவர் - ஒரு கிறிஸ்தவரானார். 2. கிறிஸ்துவை துன்பப்படுத்தியவர் - கிறிஸ்துவுக்காக ஜீவனை விடவும் ஆயத்தமானார். 3. தன் பார்வையில் நீதிமானாய் இருந்தவர் - தேவனுடைய பார்வையில் ஒரு பெரிய பாவி என உணர்த்தப் பட்டார்.** மெய்யாகவே பவுலின் வாழ்வை கிறிஸ்து மாற்றினார். (அப். 9:3-5).

## பவுலின் இலக்கு மாறி இருந்தது (கலா 2:20)

பவுலின் வாழ்க்கை முழுவதுமே ஒரே ஓட்டம் தான். ஓட்டப்பந்தயத்தில் ஓடும் ஒருவருக்கு தனக்கு முன்னும் பின்னும் ஓடுபவர்களைப் பார்க்க நேரமில்லை. ஒரே இலக்கு பந்தயப் பொருள் தான் **(1யோவா 2:25) நித்திய ஜீவனே இலக்கு. ஆண்டவர் ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் தன்னையே வெறுக்க வேண்டும் என்றார்.** (மத். 16:24-26) பவுல்

இதை மிகச் சரியாக செய்தார் (பிலி. 3:7 - 11) உலக மேன்மை யெல்லாம் கிறிஸ்துவை அறியும் அறிவுக்கு முன்பு குப்பை என உணர்ந்தார்.

**4. நமது வாழ்வின் இலக்கு மாறியுள்ளதா?** (2 கொரி. 4:6-7)

ஆண்டவராகிய இயேசுவின் முகம் மறுரூப மலையில் சூரியனைப் போல பிரகாசித்தது. ஒரு சிறிய பயிற்சியை நாம் செய்வோம். ஒரு பேப்பரும், பேனாவும் எடுத்துக்கொண்டு **ஒரு பட்டியலிடுங்கள் கிறிஸ்துவுக்குள் வரும் முன்பு நமக்கிருந்த மனநிலையும் இலக்கும் என்ன?** கிறிஸ்துவுக்குள் வந்த பின்பு அவைகள் எப்படி மாறி இருக்கிறது. **அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் அன்புக்கு முன்னால் குப்பை என விட்டு விட்ட காரியங்கள் எவை?** (பிலி. 3:5-6) நமது வாழ்வில் எதையெல்லாம் விட்டிருக்கிறோம் என்று பாருங்கள். பிலி. 3:20 நமது குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது. **பவுல் தனக்குண்டானதை இழப்பது மேன்மை என எண்ணினார்.**

**5. பவுல் தன்னை தாழ்த்துவதை ஆசையோடு செய்தார்**

ஒரு காலத்தில் பிரதான ஆசாரியர்களிடம் தயவு பெற்றவர். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பின்பு (அப். 9:23-25) கொலை செய்யும்படி தேடினார். தான் கொண்ட நம்பிக்கை தவறு என உணர்த்தப்பட்ட உடனே **ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்** என்று தன்னைத் தாழ்த்தி ஒப்புக்கொடுத்தார். இன்றைக்கு எப்படிப்பட்ட சத்தியத்தை எடுத்துரைத் தாலும் தன்னை மாற்றிக் கொள்ளவே முடியாத மக்களை பார்க்கும் போது பரிதாபமே மேலிடுகிறது.

**6. பவுல் ஆசையோடு சொன்னவை :**

1தீமோ 1:15 இந்த உலகில் பெரிய பாவம் செய்தவர்களில் தன்னை பிரதான பாவி என ஒத்துக்கொண்டார். 2. எபேசியர் 3:8 சபையிலே நேற்று ஞானஸ்நானம் பெற்ற ஒரு பரிசுத்தவான் இருக்கிறாரா? நான் அவரை விட சிறியவன் என்றார். 3. பவுல் இன்றைக்கு நாம் வாசிக்கும் வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டில் ஏறக்குறைய 13 நிருபங்களை எழுதியுள்ளார். பேருது (2) யோவான் (5) லூக்கா (2) இவர்களில் அதிகமாய் எழுதியவர் அப்போஸ்தலனாகிய பவுல் தான்.

1கொரி 11:1 நான் கிறிஸ்துவை பின்பற்றுவது போல நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள் என்று சொன்ன தைரியமான ஊழியர் பவுல்தான். ஆனால் 1 கொரி 15:9 **நான் அப்போஸ்தலர் எல்லாரிலும் சிறியவன்..... அப்போஸ்தலன் என்று சொல்ல பாத்திரன் அல்ல** என்றார். என்ன ஒரு தாழ்மை.

பிரியமானவர்களே, திருமண பத்திரிக்கையிலோ அல்லது வேறு விழா அழைப்பிதழ்களிலோ தங்கள் பெயரைப் பெரிய எழுத்தில் போடவில்லை என வருந்துகிற நபர்களை பார்த்திருக்கிறீர்களா? **நம் தாழ்மை எப்படிப் பட்டது சிந்தியுங்கள்.** இச்செய்தியை பவுலே ஆக்கிரமித்துக் கொண்டாரா? இல்லை நமக்கு சில பாடங்களை கற்றுத்தந்திருக்கிறாரா? **பிலி. 2:5 கிறிஸ்துவின் சிந்தையை பெறுவோம்.**

## 6. கிறிஸ்து எப்படிப்பட்டவர் (பிலி. 2:5-10)

(மத். 11:28-30)ல் ஆண்டவர் நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என்றார். ஒரு காகிதத்தில் இறங்கு முகமாக ஒரு அம்பு குறியீட்டை போடுங்கள். ஆண்டவரின் தாழ்மையைக் குறித்துக் கொள்ளுங் கள். **(1) தேவனுக்கு சமமாய் இருந்தார். (2) மனுஷரூபமானார் (3) அடிமையின் சாயலானார் (4) சிலுவையின் மரணபரியந்தம் தாழ்த்தினார்** இன்னும் கிறிஸ்து தன்னை தாழ்த்த வேண்டியது ஏதேனும் உள்ளதா?

**நமக்குள்ள பாடங்கள் :**

1. சுவிசேஷம் நம் வாழ்வையும் நமது இலக்கையும் மாற்றியிருக் வேண்டும். (2) சுவிசேஷம் நமது பழைய சுபாவங்களை மாற்றியிருக்க வேண்டும். (3) **நாம் கிறிஸ்தவர்களானால் கிறிஸ்துவிடம் இருந்த தாழ்மை நம்மிடம் வந்திருக்க வேண்டும்.** (யாக் 4:10) அப்பொழுது தேவன் நம்மை உயர்த்துவார். தேவ கிருபையும் சமாதானமும் உங்களை ஆண்டு கொள்வ தாக ஆமென்.

**N. பிச்சைமுத்து, தூத்துக்குடி.**

## நாளும் நடப்பும்

1. **இடது சாரிகள் மத்திய அரசுக்கு தந்த ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டனர்.**
2. **இந்தியா – அமெரிக்கா இடையிலான அணுசக்தி ஒப்பந்தத்துக்கு சீனா, ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், கனடா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.**
3. **கிரிக்கெட்டில், ஆசிய கோப்பையை இலங்கை தட்டிச் சென்றது.**
4. **விம்பிள்டன் கோப்பையை ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ரபேல் நடால் வென்று சாதனை படைத்தார்.**
5. **பஞ்சு விலையைக் கட்டுப்படுத்தக்கோரி தமிழகம் முழுவதும் பஞ்சாலைகள் வேலை நிறுத்தம்,**
6. **இந்திய பத்திரிகையாளருக்கு அமெரிக்காவின் உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது.**
7. **விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்சுக்கு பத்மபூசன் விருது வழங்கப்பட்டது.**
8. **நடப்பு கல்வி ஆண்டில் புதிதாக 55 பொறியியல் கல்லூரிகள் தொடங்கப் படுவதாக அமைச்சர் பொன்முடி அறிவிப்பு.**
9. **இந்தியாவில் கடந்த 13 ஆண்டுகளில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பணவீக்கம் அதிகரித்துள்ளது.**
10. **உலக ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ள ஒலிம்பிக் போட்டி அடுத்த மாதம் 8ஆம் தேதி சீனத்தலைநகர் பெய்ஜிங்கில் தொடங்க உள்ளது.**

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

அன்பான வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தினாலே வாழ்த்துக்கள் பல. இத்தொடரை நாம் படிக்கும் பொழுது ஆண்டவருக்காக நாம் தியாக உணர்வுகளை அடைந்து கொள்வோமாக! இம்மாதத்திலும் நாம் இரத்த சாட்சிகளின் தொடரில் நம்முடைய தேசத்திற்கும், நம்முடைய நாட்டிற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு வந்த அப்போஸ்தலனை பற்றிப் படிப்போம்.

## பாடம் - 10 அப்போஸ்தலனாகிய தோமா

இயேசுவானவர் தாம் தெரிந்து கொண்ட 12 அப்போஸ்தலரில் இவரும் ஒருவர் (மத். 10:3) இவர் எந்த ஒரு விசயத்தையும் போதுமான அத்தாட்சி இல்லாமல் நம்பமாட்டார். ஆகவே இவரை "ஐயப்படும் தோமா" என்று அழைப்பதுண்டு. இவர் இந்தியாவுக்கு வந்து கேரளத்திலும், தமிழகத்திலும் சுவிசேஷத்தைக் கூறி அதனிமித்தம் கொல்லப்பட்டார். ஆகவே நாம் இவரை அறிந்து கொள்வோமாக!.

### I. தோமாவின் வாழ்க்கைக் குறிப்பு

இவர் கலிலேயா நாட்டைச் சேர்ந்தவர். அந்நாட்டினை செழிக்க வைக்கும் கலிலேயாக் கடலில் மீன் பிடிக்கும் மீனவர். தோமா எந்த ஒரு விசயத்தையும் தெளிவாக அறிந்த பின்பு விசுவாசிக்கக் கூடியவர். இயேசுவை மேசியா என்று போதுமான அத்தாட்சியைக் கண்ட பின்பு ஆண்டவரை விசுவாசித்து அவருக்குப்பின் சென்றார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் விசயத்தில் உறுதி படைத்தவராக விளங்கினார். அது எப்படியெனில் இயேசு தனது நண்பன் லாசருவைப் பார்க்க யூதேயாவுக்கு போகத் தீர்மானித்த போது சீஷர்கள் அனைவரும் தோமாவைத் தவிர "ரபீ இப்பொழுதுதான் யூதர் உம்மை கல்லெறியத் தேடினார்களே மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா" என்றார்கள் (யோவா 11:7,8) அதற்கு இயேசு சீஷர்களைப் பார்த்து பகலுக்கு 12 மணி நேரம் இல்லையா நாம் பகலிலே நடக்கிறபடியால் ஒரு இடறலும் வராது என்று கூறியும் சீஷர்கள் அவரைப் பின்பற்ற பயப்பட்டார்கள். ஆனால், தோமா அவரைப் பின்பற்றுவதில் பயப்படாமல் அவர்மேல் விசுவாசமுள்ள வனாயிருந்து சீஷர்களைப் பார்த்து, "அவரோடு கூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள்" என்றார் (யோவா. 11:16).

அருமையானவர்களே, நாம் கிறிஸ்தவர்களாக இவ்வுலகில் வாழும் பொழுது நமக்கும் பலவிதமான பாடுகளும், மனுஷர்களாலும், கள்ளப் போதகர்களாலும், கள்ள சகோதரர்களாலும் பயமுறுத்தல்கள் நேரிடலாம்.

மகா போதகரான இயேசு கிறிஸ்துவுக்கு மற்ற போதகர்களே எதிராளிகளாக இருந்தனர். அதேபோல அப்போஸ்தலர்களும் கிறிஸ்தவ போதர்களாக இருந்து போதித்த போது அவர்களை பயமுறுத்தியவர்கள் யூதப் போதகர்களே! (அப். 4:21). இன்றைய நாட்களிலும் இதே போலவே ஒரு ஊழியரை பயமுறுத்த அல்லது ஊழியத்தை அழிக்க மற்ற ஊழியர்களே காரணமாக உள்ளனர். இது ஆத்தும ஆதாயத்திற்கு பாதகமாகவும், இந்து முன்னணிக்கு சாதகமாகவும் இருக்கிறது. எனவே ஒரு ஊழியக்காரருக்கு விரோதமாகக் கைக் கொட்டிச் சிரிக்காமல் கைகோர்த்து, மனுஷர்களால் வரும் பயமுறுத்தல்களுக்குப் பயப்படாமல் அப்போஸ்தலனாகிய தோமாவைப்போல நாமும் ஆண்டவரோடு கூட மரிக்கும்படி போவோம் வாருங்கள் என்று கூறுவோமாக!.

## II. தோமாவின் விசுவாசப் பலவீனமும், பலமும்

இயேசுவானவர் சிலுவைக்கு போவதற்கு சுமார் ஒரு வாரத்திற்கு முன் சீஷர்களிடத்தில் கடைசி வார்த்தைகளை யோவான் 14ம் அதிகாரத்திலிருந்து 17ம் அதிகாரம் வரை பேசியுள்ளார். அந்த கடைசி வார்த்தைகளில் ஒன்றான பரலோகத்திற்கு போகும் வழியைப் பற்றி கூறுகிறார். நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள் வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார். அப்பொழுது தோமா அவரை நோக்கி ஆண்டவரே நீர் போகிற இடத்தை அறியோமே வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான் (யோவா 14:4,5) இது தோமாவின் விசுவாச பலவீனத்தைக் காட்டுகிறது! அப்போது இயேசு நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று உறுதியாகக் கூறினார் (யோவா 14:6).

இயேசு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்த வாரத்தின் முதல் நாளிலே சீஷர்களுக்குத் தரிசனமானார். ஆனால், அப்பொழுது தோமா சீஷர்களுடன் இருக்கவில்லை. இயேசுவும் அவரது சீஷர்களும் ஐக்கியமாக இருந்ததை தோமா இழந்தார்! தவிர அவர்கள் சந்தோஷமாக இருந்தனர். ஆனால், தோமா இந்த சந்தோஷத்தையும் இழந்த படியால் அவர் விசுவாசத்தில் சந்தேகப் பிராணியானார்! (யோவா 20:19-25) இயேசுவைத் தரிசித்த சீஷர்கள் கர்த்தரைக் கண்டோம் என்றார் கள். அதற்கு தோமா அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு அந்தக் காயத்திலே என் விரலையிட்டு என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான்.

அன்பான விசுவாசியே, வாரத்தின் முதல்நாளிலே சபை கூடி வருதலை தவிர்க்கும்போது இயேசுவோடு இருக்கும் சிலாக்கியத்தை இழக்க நேரிடும் (மத். 18:20) சபையார் எல்லாரும் ஐக்கியமாக மகிழ்ச்சியோடு இருக்கும் சிலாக்கியத்தையும் இழக்க நேரிடும் (அப். 2:46) இதன் விளைவாக சந்தேகப் படும் இருதயம் உருவாகிவிடும். எனவே சபை கூடி வருதலை சிலர் விடுவது போல நாம் விடாமல் வாரத்தின் முதல் நாள்தோறும் ஆராதனையில் இயேசுவோடு இருப்போம். அவருடைய வார்த்தைகள் நம்மை பலமுள்ளவர் களாக்கும்.

தோமாவுக்கு எட்டு நாட்கள் தருணம் கொடுக்கப்பட்டது, ஆனாலும் தோமா அவிசுவாசமுடையவராகவே இருந்தார். எட்டு நாட்களுக்குப் பின்பு அவருடைய சீஷர்களும், தோமாவும் வீட்டுக்குள்ளே கதவுகளைப் பூட்டி உள்ளே இருந்தனர். அப்பொழுது இயேசு அவர்களின் நடுவே நின்று உங்களுக்குச சமாதானம் என்றார் (யோவா 20:26). தோமாவின் விசுவாசப் பலவீனத்தை அறிந்த ஆண்டவர் தோமாவை நோக்கி நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார் உன் கையை நீட்டி என் விலாவிலே போடு அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார் (யோவா 20:27). அவ்வளவு தான் உடனே தோமாவின் விசுவாசப் பலவீனம் பலம் கொண்டது! தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக என் ஆண்டவரே! என் தேவனே என்றான்! (யோவா 20:28) அதற்கு இயேசு தோமாவே நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித் தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார் (யோவா 20:29).

தோமாவின் விசுவாசத்தை பலப்படுத்தினவர் நம்மையும் பலப்படுத்த வல்லவராயிருக்கிறார். "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு" என்று நாம் அறிக்கையிட லாமே! (பிலி. 4:13).

## III. தோமாவின் ஊழியம்

இயேசுவானவர் தோமாவின் விசுவாசத்தைப் பலப்படுத்தினபடியால் அவர் மற்ற அப்போஸ்தலரைக் காட்டிலும் திட விசுவாசமுடையவராய் தொலைதூரம் சென்று ஊழியம் செய்யவும் கிறிஸ்துவுக்காய் மரிக்கும் மன பலத்தையும் அவருக்கு அளித்தது! அவரது ஆரம்ப கால ஊழியம் மெசபடேமியாவிலுள்ள எசெடா நகரில் தனது ஊழியத்தை ஆரம்பித்தார். பின்பு அப்போஸ்தலனாகிய ததேயுவுடன் பாபிலோனுக்குச் சென்று அவருடன் சில காலம் ஊழியம் செய்தார். அதன் பின்னர் தோமா மட்டும் தனியாக பாரசீகத்திலுள்ள அபியாபெனியில் ஊழியம் செய்ததாக வரலாறு கூறுகிறது. அந்நாட்களில் எகிப்து, பாலஸ்தீனம், இந்தியா போன்ற நாடுகள் வாணிபத்தின் மூலம் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டிருந்தன இந்த வாணிபத்தின் மார்க்கமானது பாரசீகத்தின் வழியாகச் சென்றது. எனவே அப்போஸ்தலனாகிய தோமா இதை பயன்படுத்த விரும்பி இந்தியாவுக்கு வந்தார்.

கி.பி. 49ல் தோமா இந்தியாவுக்கு வந்து தற்போதுள்ள பஞ்சாப் பகுதிக்குச் சென்று ஊழியம் செய்ததாக சரித்திரம் தெளிவாய் கூறுகிறது. அக்காலத்தில் காந்தாரத்தை (பஞ்சாப்) ஆண்ட குந்த பேரரசின் மன்னன் தோமாவை தனது அரண்மனைக் கட்டிட வல்லுநராக நியமித்தான். அப்பொழுது மன்னனின் குமாரன் காட் என்பவனை உயிரோடெழுப்பினார் இதன் விளைவாக குந்த போரஸ் கிறிஸ்தவரானார். தோமாவின் ஊழியத் திற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்ததாகத் தெரிகிறது.

அந்நாட்களில் குஷானியரின் படையெடுப்புக் காரணமாக தோமா பஞ்சாப்பை விட்டு வெளியேறினார். பின்பு சோக்கோற்றிரா என்ற தீவுக்குச் சென்று ஊழியம் செய்தார். அங்கிருந்து வணிகக் கப்பல் மூலமாய் கி.பி. 52ல் கேரளாவுக்குச் சென்றார். அங்கே மலபார் கடற்கரையில் கிரங்கனூரில்

ஊழியம் செய்தார். அந்நாட்களில் இத்துறைமுகம் முசிறிஸ் என்றழைக்கப் பட்டது, இது கொச்சிக்கருகே இருந்தது!.


அப்போஸ்தலனாகிய தோமா கேரளாவில் பாலூர், கிரங்கனூர், பாரூர், கோக்கமங்கலம், காயல், நிரணம், கொல்லம் ஆகிய ஏழு இடங்களில் ஊழியம் செய்ததாக அதிகாரப்பூர்வமாகச் சொல்லப்படுகிறது. தோமா கிரங்கனூர் துறைமுகத்தில் ஊழியம் செய்த பொழுது ஐந்து பிராமண நம்பூதிரிகள் தோமாவை பரியாசம் செய்தனர். அப்பொழுது தோமா அவர்களிடம் நான் தினமும் ஆராதித்து வரும் இயேசு கிறிஸ்து மெய்யான தெய்வகுமாரன் என்றால் இந்த கடல் நீரை அள்ளி வானத்தில் வீசும் பொழுது அது அப்படியே நிற்கவும், பின்பு அந்நீர் மலர்களாக விழவும் வேண்டும் என்று சவால் விட்டதாகவும் அதன்படி அங்கே இந்த அற்புதம் நடைபெற்றதாகவும் அதன் விளைவாக அந்த ஐந்து நம்பூதிரிகள் மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதாகவும் சரித்திரம் கூறுகின்றது. அதன்பின்பு தோமா தமிழ் நாட்டுக்கு வந்து ஊழியம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. பாண்டிய மன்னன் ஒருவனை தோமா வியாதியிலிருந்து குணமாக்கி அவனை கிறிஸ்தவனாக்கி னார் என்று பாரம்பரியச் செய்திகள் கூறுகின்றன. பின்பு தோமா இந்தியாவின் கிழக்குக் கரையோரமாக கடல் வழியாக சீனா சென்று ஊழியம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. சிறிது காலத்திற்குப்பின்பு மீண்டுமாக கி.பி. 70ல் இந்தியா வந்து தற்போதைய சென்னைக்கு வந்து ஊழியம் செய்தார்.

## IV. தோமாவின் இரத்த சாட்சி

தோமா சென்னைக்கருகேயுள்ள மைலாப்பூரில் ஊழியம் செய்து கொண்டிருந்த போது காளிகோவில் பூசாரிகளான பிராமணர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அண்டை மாநிலமான கேரளாவில் அநேகர் கிறிஸ்தவர்களாக மாறினர் விசேஷமாக பல நம்பூதிரிகள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட செய்திகளை அறிந்த இந்த பூசாரிகள் தோமாவைக் கொல்லத் திட்ட மிட்டனர்! அப்பொழுது சென்னையை ஆண்ட மிஸ்தி என்ற அரசன் தோமாவுக்கு எதிராளியாக இருந்தான். ஆகவே, பிராமணர்களின் கொலை சதிக்கு இவனும் உடந்தையாகக்காணப்பட்டான்.

தோமா சின்னமலை என்ற இடத்திலுள்ள குகை ஒன்றில் ஜெபிப்பது வழக்கம். அவ்வாறு அவர் முழங்கால் படியிட்டு ஜெபித்துக் கொண்டிருக்கும் போது காளிகோவில் பூசாரிகள் தோமாவை ஈட்டியால் குத்திவிட்டு ஓடிவிட்டனர். படுகாயமடைந்த அப்போஸ்தலன் மகிவும் கஷ்டப்பட்டு ஊர்ந்தபடியே தற்போது புனித தோமா மலை என்றழைக்கப்படும் பெரிய மலைக்குச் சென்று கி.பி. 72-ல் ஜூலை 3ந் தேதி அன்று அங்கே மரித்தார் என்று வரலாறு கூறுகின்றது. அந்நாட்களிலிருந்து கிறிஸ்தவர்கள் அவரது உடலை எடுத்து மைலாப்பூரில் அடக்கம் பண்ணினார்கள் அந்த கல்லறை இன்றும் உள்ளது!. அந்த கல்லறை முதல் நூற்றாண்டைச் சார்ந்தது என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

(தொடரும்) **K. பாஸ்கர்**, சிறுமுகை, கோவை



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postel Registration No. Erode / 26 / 2006 - 2008
Posted at Erode HPO on 20 th or 21 st of Every Month

**திருமறை ஆசான்** இதழ் ஆசிரியரின்
**திருமறைதியானம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 9:45 | மணி |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 6:30 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **ஏழு** பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

**Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.**
**Editor. S. Rajanayagam.**